# உதயன்

விலை ரூபா 6.00

கடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 5 சனிக்கிழமை (19-05-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:174


★ புலிகள் மீதான தடை நீக்கம்

★ பொருளாதாரக் கட்டுப்பாட்டை அகற்றுதல்

★ காலவரையறையற்ற யுத்தநிறுத்தம்

# 3 முக்கிய முன் நடவடிக்கைகளை நிறைவு செய்தால் மட்டுமே பேச்சு!

## எரிக்சொல்ஹெய்ம் ஊடாக அரசுக்குப் புலிகள் தெரிவிப்பு

வவுனியா,மே19

**ஒரு நிலையான போர் நிறுத்தம், புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கம், தமிழர் தாயகம் மீது திணிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை அகற்றுதல் ஆகியவை சமாதானப் பேச்சுக்களை நிகழ்த்துவதற்கான - அத்திவாரமான - அவசியமான - மூன்று முன் நடவடிக்கைகளாகும். இவற்றை நிறைவு செய்தால்தான் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கமுடியும்.**

**- இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டது.**

மல்லாவியில் நேற்று முன்தினம் தம்மைச் சந்தித்த நோர்வே சமாதானக் குழுவினிடமே விடுதலைப் புலிகளின் இந்த நிலைப்பாட்டை, புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெளிவாகத் தெரிவித்தார் என்று அறிவிக்கப்பட்டது.

புலிகள் மீதான தடைதான் பேச்சுவார்த்தைக்கு முக்கிய முட்டுக்கட்டையாக அமைந்துவிட்டது என்றும் அவர் நோர்வேத் தூதுவர்களிடம் எடுத்துக் கூறினார்.

"தடைசெய்யப்பட்ட - சட்டவிரோத

(14ஆம் பக்கம் பார்க்க)



யாழ்.ஸ்ரான்லி வீதியில் உள்ள வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் தமிழ் விவகார அமைச்சின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்தில் யாழ். அரச அதிபர் கே.சண்முகநாதன் உரையாற்றுவதை படத்தில் காணலாம். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன, மாகாண அமைச்சின் பிரதம செயலாளர் எஸ்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் அமர்ந்துள்ளனர். (ஐ)

## சொல்ஹெய்ம் நேற்றிரவு ஜனாதிபதியைச் சந்தித்தார்

கொழும்பு,மே19

வன்னியில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுக்களின் போது அவர்கள் தெரிவித்த விடயங்கள் குறித்து நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதியிடம் விளக்கிக் கூறியுள்ளார்.

வன்னியில் இருந்து கொழும்பு திரும்பிய சொல்ஹெய்ம் நேற்றிரவு 7மணி முதல் ஒருமணி நேரம் ஜனாதிபதியுடன் கலந்துரையாடினார். வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் அப்போது ஜனாதிபதியுடன் உடனிருந்தார்.

பேச்சுக்களை ஆரம்பிக்க விடுதலைப் புலிகள் தெரிவித்த மூன்று விடயங்கள் குறித்தும் ஜனாதிபதியிடம் விளக்கிய சொல்ஹெய்ம், அது தொடர்பாக அரசின் நிலைப்பாட்டை அறிவதில் கூடிய அக்கறை காட்டினார்

(14ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கான ஸ்திர நிலை இன்னமும் உருவாகவில்லை!

### ரணிலிடம் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

கொழும்பு,மே19

இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிக்கக்கூடிய ஸ்திரமான நிலை இன்னமும் உருவாகவில்லை என்று நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

வன்னியில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்திவிட்டு நேற்றுப் பிற்பகல் கொழும்பு திரும்பிய அவர், ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து நடத்திய கலந்துரையாடலின் போதே இப்படிக் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் வாசஸ்தலத்தில் நேற்று மாலை 5. மணி முதல் 45 நிமிடநேரம் இச் சந்திப்பு இடம்பெற்றது.

பேச்சுக்களை ஆரம்பிக்கக் கூடிய சூழ்நிலையை உருவாக்க விடுதலைப் புலிகள் தெரிவித்த மூன்று முக்கிய விடயங்கள் குறித்து சொல்ஹெய்ம் ரணிலுக்கும் விளக்கிக் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## வவுனியாவில் மூன்று இடங்களில் படைகள் மீது புலிகள் தாக்குதல்!

### 2 பொலீஸார் உட்பட 13 சிப்பாய்கள் பலி! 23 பேர் காயம்!

வவுனியா,மே19

வவுனியா மாவட்டத்தில் நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய மூன்று வெவ்வேறு தாக்குதல்களில் இரு பொலஸார் உட்பட மொத்தம் 13 படையினர் உயிரிழந்ததாகவும் 23 படையினர் காயமடைந்ததாகவும் வவுனியா படை வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

பம்மைமடு, ஆசிகுளம் மற்றும் பறையனாளங்குளம் ஆகிய இடங்களில் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

வவுனியா - மன்னார் வீதியில் பம்பைமடுப் பகுதியில் நேற்றுக் காலை 8.15 மணியளவில் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் அப்பகுதியில் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். மற்றொரு சிப்பாய் காயமடைந்தார். பின்னர் அவர் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

வவுனியா நகருக்குத் தென்கிழக்கே ஆசிகுளம் பகுதியில் ரோந்தில் ஈடுபட்டிருந்த படையினர் மீது நேற்று முற்பகல் 11.15 மணியளவில் விடுதலைப் புலிகள் பதுங்கி இருந்து நடத்திய தாக்குதலில் பொலீஸ் கான்ஸ்டபிள்கள் இருவர் உட்பட ஐந்து படையினர் கொல்லப்பட்டனர். நால்வர் காயமடைந்தனர்.

மூன்றாவது தாக்குதல் சம்பவம் சுண்டிக்குளத்திலிருந்து பறையனாளங்குளம் நோக்கிச் சென்று கொண்டிருந்த படையினரது வாகன அணி மீது நடத்தப்பட்டது. வாகன அணி மீது புலிகள் ஷெல் தாக்குதல்களை நடத்தியதில் ஏழு படையினர் கொலலப்பட்டனர்.



பம்பைமடுவில் நேற்று கண்ணி வெடித் தாக்குதல் இடம்பெற்ற பகுதியில் எடுக்கப்பட்ட படம்.

பலர் காயமடைந்தனர். நேற்றைய தாக்குதல்களில் மொததம் 13 பேர் கொல்லப்பட்டும் 23 பேர் காயமடைந்தும் உள்ளதாக வவுனியா படை வட்டாரங்கள் தெரிவித்தன. எனினும் இத்தாக்குதல்கள் தொடர்பாக விசேட ஊடகத் தகவல்

(14ஆம் பக்கம் பார்க்க)

### விமானப் பயணப் பதிவு செய்தோர்

## குறித்த தினத்தில் பயணம் இன்றேல் அனுமதி ரத்தாகும்

யாழ்ப்பாணம்,மே19

பலாலி - இரத்மலானை பயணிகள் விமான சேவையில் பயணம் மேற்கொள்பவர்கள் பயணச்சீட்டுப் பெறுவதற்கு புதிய நடைமுறை இன்று முதல் அமுலுக்குக் கொண்டு வரப்படுவதாக யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபையின் (ரான்) யாழ்.அலுவலகத்தில் பதிவு செய்யும பயணத்திகதியில் இருந்து ஒரு வாரகாலத்துக்குள் பயணச்சீட்டுக்களைக் கொள்வனவு செய்ய வேண்டும் என்றும் -

அவ்வாறு கொள்வனவு செய்யாவிட்டால் அவர்கள் மீண்டும் பாதுகாப்பு அனுமதிக்குப் புதிதாக விண்ணப்பித்து அனுமதி கிடைத்த பின்னரே பதிவுகளை மேற்கொண்டு மீண்டும் பயணச்சீட்டு கொள்வனவு செய்ய முடியும் என்றும் -

அறிவிக்கப்பட்டுள்ளது.

பயணத்துக்கான பதிவுகளை மேற்கொண்ட பின்னர் குறிப்பிட்ட திகதிகளில் பயணத்தை மேற்கொள்ளாதவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை அடுத்தே இந்தப் புதிய நடைமுறை அமுலுக்குக் கொண்டுவரப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மாகாண சபையிலும் திணைக்களங்களிலும் சகல வெற்றிடங்களும் விரைவில் நிரப்பப்படும்

## நேற்றைய ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் ஆளுநர் தகவல்

யாழ்ப்பாணம்,மே19

வடக்கு - கிழக்கு மாகாண சபையிலும் அதன் கீழுள்ள திணைக்களங்களிலும் உள்ள வெற்றிடங்கள் மிக விரைவில் நிரப்பப்படும்.

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஆசோக ஜெயவர்த்தனா இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு, வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சில் நேற்று நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இக்கூட்டம் மாகாண ஆளுநர், மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்றது.

மாகாண ஆளுநர் ஆசோக ஜெயவர்த்தனா அங்கு உரையாற்றும் போது மேலும் கூறியதாவது:-

மாகாண சபையில் வேலைத்திட்டங்கள் யாவும் மாவட்ட மட்டத்தில் அமுல் செய்யப்படும். இந்தச் சபையின வேலைத்திட்டங்கள் மிக நீண்டவை.

வெளிநாடுகளில் இருந்து பெரும் தொகையான நிதி வடக்கு- கிழக்கு மாகாண சபைக்குக் கிடைத்துள்ளது. எமது அதிகாரிகளினது உற்சாகமும் புத்திக்கூர்மையும் எமது நடவடிக்கைகளை முன்னேற்றகரமாக முன் எடுத்துச்செல்ல உதவும்.

வடக்கின் அபிவிருத்தி விடயத்தில அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அர்ப்பணிப்புடன் செயற்படுவதை நாம் ஆதரித்து ஊக்கப்படுத்த வேணடும்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை கடந்த 10 ஆண்டுகளாக நாங்கள் நன்கு அறிவோம். அவர் எப்பொழுதும் மக்களுக்கு செய்ய வேண்டிய சேவைகள் பற்றியே எம்முடன் பேசுவார்.

வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு உருவாக்கப்பட்டது ஓர் அற்புதமான நிகழ்வாகும். இந்த அமைச்சின் அலுவலகம் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல வவுனியாவிலும் திறக்கப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கு நிர்வாகத்தைப பொறுப்பேற்றவர்கள் என்ற வகையில் அமைச்சரின் நடவடிக்கைகளுக்கு உதவுவது எமது கடமையாகும்.

யாழ்.மாவட்டத்தில் இவ்வாண்டு 1.3 கோடி ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி அமைச்சின் உதவியுடனேயே நிறைவேற்றப்படும் -

என்று கூறினார்

**தவராஜா எம்.பி. உரை**

யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.தவராஜா உரையாற்றும் போது கூறியதாவது:-

யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்திக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி, வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு நிதி, மாகாண அமைச்சு நிதி ஆகிய ஒதுக்கீடுகளே கிடைத்துள்ளன.

ஆனால் உலக வங்கி நிதி யாழ. மாவட்டத்தின் அபிவிருத்திக்கு இதுவரை கிடைக்கவில்லை. உலக வங்கி வேண்டும் என்றே புறக்கணிதது வருகிறது. எனவே நிதி உதவி தொடர்பாக உலக வங்கியிடம் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு வேண்டுகோள் விடுக்க வேண்டும் - என்று தெரிவித்தார்.

யாழ்.மாநகரசபை முதல்வர் என். ரவிராஜ் உரையாற்றும் போது கூறியதாவது:-

யாழ். மாநகர சபை சகல விதத்திலும் அரசாங்கத்தினால் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. சபைக்கு வாகனங்கள் உட்பட வழங்கப்பட வேண்டிய உதவிகள் எதுவும் வழங்கப்படவில்லை.

**மாநகர சபை மீது பாரபட்சம்**

யாழ்.மாநகர சபை மீது கடந்த காலங்களில் பாரபட்சம் காட்டப்பட்டு வந்துள்ளதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

சபையின் கூட்டங்களை நடத்துவதற்குக் கூட வசதியான கட்டடங்கள் எதுவும் இல்லை. 66 மில்லியன் ரூபா திட்டங்களுக்கான முன்மொழிவுகளை யாழ்.மாநகர சபை வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபைக்கு சமர்ப்பித்துள்ள போதிலும். இதுவரையும் எந்தத் திட்டங்களுக்கும் அனுமதியும் கிடைக்கவில்லை என்று - ரவிராஜ் கூறினார்.

**கூட்டணிப் பிரதிநிதி**

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கட்டுப்பாட்டிலுள்ள வலி.வடக்கு பிரதேசசபையின் தலைவர் திருமதி கே.ஶ்ரீபாஸ்கரன் உரையாற்றும் போது கூறியதாவது:-

வலி.வடக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த பல குடும்பங்கள் கடந்த 10 வருடங்களாக மீளக் குடியமர முடியாத நிலையில் உள்ளன. இவர்களில் ஒரு பகுதியினரையாவது மீளக் குடியமரச் செய்ய வேண்டும்- என்று கூறினார்.

நெடுந்தீவுப் பிரதேச சபையின் தலைவர் புலவர் ஏ.அரியநாயகம் உரையாற்றும் போது கூறியதாவது:-

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்திற்கு வருகை தராத போதும் அந்தக் கட்சியைச் சேர்ந்த யாழ்.மாநகர மேயர் மற்றும் வலி. வடக்குப் பிரதேச சபையின் தலைவர் ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு அபிவிருத்திகள் தொடர்பாக வலியுறுத்தி உள்ளனர் அவர்களுக்கு எமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்று கூறினார்.

வலி.மேற்குப் பிரதேச சபையின் தலைவர் நா.திரிலோகநாதன் உரையாற்றும் போது -

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் போன்ற பல அதிகாரிகள் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் தென்னிலங்கைப் பத்திரிகையாளர்கள் யாழ்ப்பாணம் வருகைதரும் போது அவர்களிடம் தெரிவிக்கும் தகவல்களை ஏன் எமது நாடாளுமன்ற உறுப்பினர்களிடமோ அல்லது அமைச்சரிடமோ தெரிவிப்பதில்லை?

இந்த அதிகாரிகள் திட்டமிட்டு விசமத்தனமான பிரசாரங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். எனவே யாழ். ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் போன்ற அதிகாரிகளுக்குப் பதிலாக வேறு அதிகாரிகள் நியமனம் செய்யப்பட வேண்டும்.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின்றி யாழ்ப்பாணத்துக்கு மருந்துப் பொருள்களை எடுத்து வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று கூறினார்.

ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர்களான கே.வி.குகேந்திரன் (ஜெகன்), எஸ்.சிவதாசன் ஆகியோரும் மாகாணசபையின் பிரதம செயலாளர் எஸ்.கிருஷ்ணமூர்த்தி. யாழ்.அரசாங்க அதிபர் க.சண்முகநாதன், கிளிநொசசி மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஐயாத்துரை, பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் மு.பாக்கியநாதன், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைத் தலைவர் வஸ்தியாகராசா மாகாண அமைசசின் செயலாளர்கள் மற்றும் பிரதேச சபைகளின் தலைவர்கள், அரச திணைக்களத் தலைவர்கள் உட்படப் பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ. ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராஜா, சிவமகராசா, ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் அ.வினாயகமூர்த்தி ஆகியோர் கூட்டத்திற்குச் சமுகமளிக்கவில்லை. (ஐ-5-6-173)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 07 - 05 - 1942

மறைவு 19 - 04 - 2001

திருமதி

**சரஸ்வதிப்பிள்ளை கந்தசாமி**

அன்பின் இருப்பிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
தியாகத்தின் தீபமாய் திகழ்ந்த எம் தெய்வமே!
மண்ணை விட்டு நீங்கள் மறைந்து போனாலும்
எம்மைவிட்டு நீங்காது உங்கள் நினைவு

இன்று (19.05.2001) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

தற்காலிக முகவரி:
*குப்பிளான் வடக்கு,*
*குப்பிளான்.*

நிரந்தர முகவரி:
*விடத்தற்பளை,*
*மிருசுவில்.*

கணவன், மக்கள்,
மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

(C/16775)

## வை.எம்.சீ.ஏ. கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே19

யாழ்.வை.எம்.சீ.ஏயினால் நடத்தப்படும் 'மனித உரிமைகளும் சமாதானமும்' என்ற தலைப்பிலான மூன்று நாள் கருத்தரங்கு நேற்றுக் காலை 9 மணிக்கு டி.ஆர்.அருமைநாயகம் தலைமையில் வை.எம்.சீ.ஏ.மண்டபத்தில் ஆரம்பமானது.

இக்கருத்தரங்கை நடத்துவதற்காக இலங்கை வை.எம்.சீ.ஏக்களின் தேசியத் தலைவர் இராஜ் விஜயசிங்க, சமாதான இயக்க புனரமைப்புச் செயலாளர் லக்ஷான் டயஸ், கொழும்பு வை.எம்.சி.ஏயின் முன்னாள் செயலாளர் சாந்தா பெர்னாண்டோ, 'சீடா' நிறுவன முகவர் ராணி சாமுவேல் ஆகியோர் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர். நாளை ஞாயிற்றுக் கிழமையுடன் முடிவடையும் இக்கருத்தரங்கைத் தொடர்ந்து யாழ்.வை.எம். சி.ஏயினால் நடத்தப்படும் பல்வேறு நிகழ்வுகளிலும் இவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ஐ-5-6)

## கொழும்பில் குருகுலம் இன்று அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,மே19

சர்வதேச இந்துமத குருபீடத்தினால் ஆரம்பிக்கப்படும் ஸ்ரீ ஐயப்பன் குருகுலத்தின் ஆரம்ப நிகழ்வு இன்று நண்பகல் 12 மணிக்கு கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ-7)

## கண்டெடுக்கப்பட்ட தங்கஆபரணம்

யாழ்ப்பாணம்,மே19

தமது நிறுவன வாசலில் தங்க ஆபரணம் ஒன்று கண்டு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதனைத் தவறவிட்டவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் திருநெல்வேலி, முடமாவடி பூங்கனிச் சோலை உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

(அ)

# கொடிகாமம் பாடசாலைகளை இயக்குவதற்கு ஏற்பாடுகள்

கொடிகாமம், மீசாலை ஆகிய பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர்வதற்கான ஆயத்தங்கள் நடைபெற்று வருவதையடுத்து இப்பகுதியில் உள்ள பாடசாலைகளை இயக்குவதற்கு தென்மராட்சிக் கல்வி வலய அலுவலகத்தினால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முதற்கட்டமாக மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், கொடிகாமம திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் ஆகியவற்றை இயக்குவதற்கான பதிவுகள் அந்தந்தப் பாடசாலைகளில் அடுத்த வாரம் மேற்கொள்ளப்படவுள்ளன.

எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திலும்.

எதிர்வரும் 23ஆம் திகதி புதன் கிழமை தொடக்கம் 25ஆம் திகதி வரை மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்திலும் பதிவுகள் மேற்கொள்ளப்படும் எனவும், ஏனைய பாடசாலை மாணவர்களும் இப்பாடசாலைகளில் இணைந்து கல்வி கற்பதற்கு வசதி செய்யப்பட்டிருப்பதால் அவர்களும் பதிவுசெய்து கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

# கொழும்பு கொம்பனித்தெரு ஆலய குருக்கள் இருவர் தடுத்துவைப்பு

கொழும்பு,மே19

கொழும்பு கொம்பனித் தெரு சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் குருக்கள் இருவர் கொம்பனி வீதி பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை 8.30 மணியளவில் ஆலய விடுதியில் தங்கியிருந்த இரு குருக்களுமே பொலீஸாரால் கைது செய்யப்பட்டு தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை -

கைது செய்யப்பட்டுள்ள சிறிராமச்சந்திரசர்மா, சிறிதரன் சிறி சண்முகாநந்தசர்மா ஆகிய இரு குருக்களையும் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவுக்கு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் செயலாளர் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இக் கடிதத்தின் பிரதிகள் நீதியமைச்சர் பட்டி வீரக்கோன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் தொல்லை தவிர்ப்புக் குழுவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நயினை பக்தர்களுடன் வந்த படகு மண்பிட்டியில் மோதியது

யாழ்ப்பாணம்,மே19

நயினாதீவில் இருந்து நேற்றுப் பிற்பகல் குறிகாட்டுவானுக்கு பக்தர்களை ஏற்றிவந்த படகு ஒன்று குறிகாட்டுவான் துறைக்கு அருகே கடலில் உள்ள மண்பிட்டி ஒன்றுடன் மோதுண்டது. இதனால் பயணிகள் பெரும் அல்லோலகல்லோலப்பட்டனர். எனினும் பின்னர் பக்தர்கள் பலரும் கடலினுள் குதித்து பலத்த சிரமத்தின் மத்தியில் படகினைத் தள்ளி கரைக்குக் கொண்டு வந்தனர்.

அதிக எண்ணிக்கையான பயணிகளைப் படகில் ஏற்றியதாலேயே இந்த நிலைமை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)


**யாழ்.பல்கலைக்கழகம்**

**இந்து பண்பாட்டுக்கழக வளர்ச்சி நிதிக்கான நிகழ்வுகள்**

**இடம் : யா/புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி மைதானம்**

**காலம் : நாளை (20.05.2001) ஞாயிறு பி.ப.2.00 மணி**

**நிகழ்ச்சிகள்:**

***சாண்டோ துரைரத்தினத்தின் மாணவரின் வீரதீர விளையாட்டு***

***A.O.M.A. கராட்டிக் கழகத்தினரின் கண்காட்சி நிகழ்வு***

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பளிப்பு: 20/=, 50/=, 100/=

கழகத்தினர்.

விளம்பர அன்பளிப்பு:

**குமரன் அரைக்கும் ஆலை**

யாழ்.பருத்தித்துறை வீதி, சிறுப்பிட்டி. (87990)



**கலந்துரையாடல்**

**தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கம் - யாழ்.அலகு**

கல்வி அமைச்சின் வேலைப்பகுதி உயர் அதிகாரி யுடனான கலந்துரையாடல் ஒன்று 21-05-2001 திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள கல்வித்திணைக்கள அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சகல அங்கத்தவர்களையும் தவறாது பங்குபற்றுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

- இணைப்பாளர்.

(87986)



**யாழ்.மாவட்டத்திலுள்ள கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தையல் போதனாசிரியர்களுக்கான**

**அறிவித்தல்**

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் தையல் போதனாசிரியர்களையும் கிராம அபிவிருத்திப் பணிப்பாளர் சந்திக்க விரும்புவதால் கண்டி வீதியில் அமைந்துள்ள ஹொட்டல் பஸ்ரியனில் அவரை 20-05-2001 ஞாயிறு காலை 11.00 மணிக்கு சந்திக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**ஜீ.ரி.ஞானசேகரவேல்**

செயலாளர்,
யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்,
நலன்புரிச்சங்கம்.

(87991)

ஒருங்கிணைப்புக்குழுத் தலைமை பற்றிய சர்ச்சை;

# ஈ. பி. டி. பி. தவராஜாவுக்கு ஆனந்தசங்கரி எம். பி. பதில்

யாழ்ப்பாணம், மே 19

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் தலைமைப் பதவி தொடர்பான சர்ச்சை சம்பந்தமாக ஈ. பி. டி. பி. நாடாளுமன்ற உறுப்பினர் சி. தவராஜாவுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் வி. ஆனந்தசங்கரி பதிலளித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைமைப் பதவி சம்பந்தமாக நான் ஜனாதிபதிக்கு எழுதிய ஆட்சேபனைக் கடிதத்துக்குப் பதிலாக தவராஜா விடுத்த அறிக்கை எனக்கு ஆச்சரியத்தையோ ஆத்திரத்தையோ தரவில்லை. தமிழ் மக்களுக்கு இப்படி ஒரு நிலையா என்ற ஏக்கமே முன் நிற்கிறது. அரசு கொடுக்கின்ற சன்மானங்களுடனும் வசதி வாய்ப்புடனும் திருப்தி அடைவதை விடுத்து விதண்டாவாதம் செய்கிறார் விதண்டா வாத வல்லுநர் தவராஜா.

### ஜனாதிபதிதான் பதில்தர வேண்டும்

நான் சட்டமேதையல்லன். ஆனால் அரசு அனுப்பும்சுற்று நிருபங்களை விளங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு படிக்காதவனும் அல்லன். நான் ஜனாதிபதிக்கே சில முக்கிய விடயங்கள் சம்பந்தமாக ஒரு கடிதம் அனுப்பியிருந்தேன் அதற்குப் பதில் அவரிடம் இருந்தே வந்திருக்க வேண்டும். ஆனால் வழக்கம் போன்று முந்திரிகைக் கொட்டைபோல் இந்த விடயத்திலும் தவராஜா முந்திக் கொண்டு தரமற்ற முறையில் அறிக்கை விடுத்துள்ளார் அதற்கு விளக்கமளிக்கவேண்டிய கடமை எனக்குண்டு. தவராஜாவின் அறிக்கையுடன் ஜனாதிபதிக்கு என்னால் அனுப்பப்பட்ட கடிதம் முழுமையாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தால் அவரின் அறிக்கை பொருத்தமானதுதானா என்பதை மக்கள் அறியவாய்ப்பாய் இருந்திருக்கும்.

மாவட்ட இணைப்புக்குழு எந்தவித இலாபமும் தரும் பதவியல்ல. ஜனநாயகம்பற்றி அடிக்கடி தமக்கேதான் ஞாபகமூட்டும் ஜனாதிபதியிடம் பல உரிமைப் பிரச்சினைகள் எழுப்பப்பட்டன. அவ்வாறு எழுப்பப்பட்ட விடயங்களில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பதவியும் ஒன்று. அப்பதவியை இவர்கள்போல் யாரும் துஷ்பிரயோகம் செய்ய வாய்ப்பில்லை. கடந்த நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்பு வரலாற்றில் என்றும் இல்லாத வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இப்பதவியில் நியமிக்கப்பட்டார்; அன்று டக்ளஸ் தேவானந்தா அமைச்சரா? அப்போது இவர் கூறும் சுற்று நிருபங்கள் இல்லையா? தேர்தல் நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்பு ஓரேயொரு இணைப்புக்குழுக் கூட்டம் - அதுகூட இரண்டு மணித்தியாலங்கள்கூட நடைபெறவில்லை. திருகோணமலையிலிருந்து மாகாண ஆளுநர் உட்பட பல உயர் அதிகாரிகள் சமுகமாகி இருந்தனர். இக்கூட்டத்துக்குச் செலவாகிய ஏழை வரி இறுப்பாளர்களின் பல லட்சம் ரூபாவுக்கும் யார் பொறுப்பு? இதற்கு தவராஜா பதில் தரவில்லை. திக்கம் வடிசாலையில் நடந்த இவர் கட்சியின் பகற்கொள்ளை, தீவக மக்களின் அடிமை வாழ்க்கை ஆகியவை பற்றி மூச்சில்லை எனது சட்ட அறிவைப் பற்றி மட்டும் பரிசோதிக்க முனைகிறார் தவராஜா.

### மக்களின் பிரதிநிதிகள் அல்லர்

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவோ அன்றி தவராஜாவோ முறைப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்லர் என்பதே எமது நிலைப்பாடு. முன்னைய தேர்தலிலும் அவ்வாறே. ஜனநாயகத்தைக் காக்கவே அன்று நாடாளுமன்றப் பதவியைத் துறந்தவன் நான் என்பதை அறிந்தவர்களுக்குத் தெரியும் — பதவிக்குப் பேராசை பிடித்து அலைவதும் குட்டிக்கரணம் அடிப்பதும் பித்துப்பிடித்து அலைவதும் நானல்லவென்று. ஒன்றை மட்டும் தவராஜாவுக்குக் கூறி வைக்க விரும்புகிறேன். பட்டம், பதவிக்காகத் தமிழ் இனத்தை விலைபேசி விற்கும் ஈனப்பிறவியல்ல நான். அவசியம் ஏற்பட்டால் இக்கணமே பதவியைத் துறக்கவும் நான் தயாராகவே உள்ளேன். தமிழ் மக்களை விலைகூறி விற்காதீர்கள், என்றே மிகப்பணிவாக தவராஜாவையும் அவரைச் சார்ந்தவர்களையும் மன்றாட்டமாக வேண்டுகிறேன்.

அம்பாறை மக்களைப் பொதுப்பட்டியலில் போடுவதாக ஏமாற்றி, வென்ற மறுகணமே அம்பாறை மக்களையும் விலைகூறி விற்றுத்தானே அமைச்சர் பதவி பெற்றார்கள்? அதை அடைய அவர்கள் செய்த சதியினால்தானே அம்பாறை கூட்டணி நியமனப் பத்திரம் நிராகரிக்கப்பட்டது தவராஜா அளவு சட்ட வல்லுநர்கள் அல்ல அம்பாறை வேட்பாளர்கள். அம்பாறை மக்களுக்குச் செய்த துரோகத்தை மறைக்கக் கபட நாடகம் ஆடத் தேவையில்லை.

### பிந்திய சுற்றுநிருபம்

முழு அமைச்சர், அரை அமைச்சரென 95 பேருக்கு இடமளிக்க வேண்டி அரசு நாளுக்கு நாள் மாறுபட்ட சுற்றறிக்கை விடலாம். ஆனால் திட்ட செயற்படுத்துகை அமைச்சின் செயலாளர் சி மாலியத்த ஒப்பமிட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பிரதிகளுடன், சகல மாவட்டச் செயலாளர்கள், அரசாங்க அதிபர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்ட 'ஆர்டிடி/டிடிஎஸ் / 1 / பொது/1' இலக்கம் கொண்ட — 20 - 04 - 2001 திகதிய — வழிகாட்டி குறிப்பு 4 ஆம் பந்தியில் பின்வருமாறு கூறுகிறது:

"பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரினால் வழங்கப்பட்ட 24-10-1996 திகதியிடப்பட்ட எச்ஏ/டீஜீ/டீ/டீப் இலக்கம் கொண்ட சுற்றறிக்கைக்கிணங்க, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அபிவிருத்திக்குழு (மா. அ.கு) ஒன்று தாபிக்கப்பட்டுள்ளது. அக்குழுவானது அம்மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களையும்கொண்டிருக்கும். அவர்கள் மாவட்டத்திற்கான நிதி ஏற்பாட்டில் கவனம் செலுத்துவர். இக்குழுக்கூட்டங்களுக்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட முதுநிலை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தலைமை வகிப்பார். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் செயலாளராக மாவட்ட செயலாளர்/அரசாங்கஅதிபர் கடமையாற்றுவார். மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபரின் கீழ் உருவாக்கப்பட்டு, திட்டச் செயற்படுத்துகை அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ள மாவட்ட திட்டமிடல் செயலகமாகச் செயற்படும்"

இதை விளங்கிக் கொள்ள திரு. தவராஜா போல்சட்ட மேதைகள் தேவையில்லை.

என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)


## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் கல்விப் பணிப்பாளர்

திரு. வீ. இராசையா

அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி மீனாட்சி வீரகத்தி

அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/மாதகல் சென்.யோசவ் ம.வி.,
யா/மாதகல் நுணசை வித்.

(87978)

## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் கல்வி வலயக்கல்விப் பணிப்பாளர்

திரு. வீ· இராசையா அவர்களின்

அன்புத் தாயார்

### திருமதி மீனாட்சி வீரகத்தி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

—அதிபர், ஆசிரியர்கள்,
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
சுன்னாகம்.

(87974)


## சமய சந்நிதிகளில்

இருபாலை கதன் கோவை கற்பகப் பிள்ளையார் ஆலயத்தின் தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று 9, 30 மணிக்கு சுவாமி தேரில் ஆரோகணிப்பார்.

தீர்த்தோற்சவம் மறுநாள் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறும். இந்த மஹோற்சவத்தை பா. செல்வசேனக் குருக்கள் நடத்தி வருகிறார்.

(க-10)

★ ★ ★

காரைநகர் மொந்திபுலம் ஸ்ரீ ஞானவைரவர் கோயில் வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது. (ம-73)

★ ★ ★

சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலயத்தின் சப்பறத் திருவிழா இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

மாலை 5.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று 6 மணிக்கு சப்பறத்தில் இறைவன் வீதியுலா வருவார். (க-10)

★ ★ ★

ஆனைக்கோட்டை அருள்மிகு கரைப்பிரான் ஆதிவிநாயகர் தேவஸ்தான வருடாந்த தேர்த்திருவிழா உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். மறுநாள் காலை 9-15 மணிக்கு தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

(3-139)

## கிராம அலுவலருக்கு அழைப்பு

தென்மராட்சி, மே 19

தென்மராட்சி மேற்குப் பிரிவைச் சேர்ந்த மறவன்புலோ, நாவற்குழி மேற்கு, கைதடி நுணாவில், மட்டுவில் தெற்கு ஆகிய பிரிவுகளுக்கான கிராம அலுவலர்களுக்கான கலந்துரையாடல் கைதடி சமநல சேவை நிலையத்தில் உள்ள 521 ஆவது பிரிகேட் அலுவலகத்தில் இன்று காலை நடைபெறவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி பிரிவுகளில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக இக்கலந்துரையாடலில் படைத்தரப்பினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட இருப்பதால் கிராம அலுவலர்களை அங்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் மீளக் குடியமர விரும்புவோர் பற்றிய விவரங்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் பதிவு செய்யப்படும் என்று ஈ. பி. டி. பி. அமைப்பினர் அறிவித்துள்ளனர். (ஐ-7-117)

## திவ்யபிரபந்த உரை

யாழ்ப்பாணம், மே 19

வண்ணை ஸ்ரீ வேங்கடேசவரதராஜப் பெருமாள் கோயிலில் வாரந்தம் இடம்பெற்று வரும் திவ்ய பிரபந்த உரையில், இன்று சனிக்கிழமை மாலை 4 30 மணிக்கு 'பிரபந்தங்களில் ஆழ்வார்கள்' என்ற பொருளில் எம்.பி அருளானந்தம் உரையாற்றுவார்.

(ம)

## கண்காட்சி இன்றும் நடக்கும்

வலிகாமம் தெற்கு, மே 19

யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியில் தற்போது நடைபெற்றுவரும் கல்வி கண்காட்சி பலரது வேண்டுகோளுக்கிணங்க இன்று சனிக்கிழமையும் இடம்பெறுமென பீடாதிபதி தி. கமலநாதன் அறிவித்துள்ளார்.

மேற்படி கண்காட்சி நேற்றுடன் முடிவடைய இருந்தது.

(ஐ-7-152)

## ஒன்று கூட அழைப்பு

யாழ்ப்பாணம், மே 19

கைது செய்யப்பட்டோர், காணாமற் போனோர் பாதுகாவலர் சங்க உறுப்பினர்களுக்கான சந்திப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 30 மணிக்கு யாழ். அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

(ஐ-7-5)

★ ★ ★

பயிலுநர் ஆசிரியர் நேர்முகப் பரீட்சைக்குத்தோற்றி இதுவரை நியமனம் கிடைக்காத பட்டதாரிகள் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில நடைபெறவுள்ள குறை நிவர்த்தி சேவையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஆளுநர், மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரி ஆகியோருடன் கலந்துரையாடவுள்ளனர்.

மேற்படி கலந்துரையாடலில் பங்குபற்றுவதற்காக யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க நிர்வாக சபை உறுப்பினர்களையும், பயிலுநர் ஆசிரியர் நியமனத்தில் பாதிக்கப்பட்ட பட்டதாரிகளையும் தங்கள் மகஜர்களுடன் மத்திய கல்லூரியில் இன்று காலை ஒன்று கூடுமாறு வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் வே. மணிமாறன் கேட்டுள்ளார்.

(ஐ-7-6)

★ ★ ★

யாழ். மாவட்ட மினிசினிமா உரிமையாளர் சங்கத்தினர் இன்று காலை 10-30 மணிக்கு யாழ். பவநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் ஆலோசனைக்கூட்டம் ஒன்றைநடத்தவுள்ளனர்.

மேற்படி கூட்டத்தில் யாழ் மாவட்ட மினிசினிமா உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும்—

மினிசினிமாக்களை இயக்குவது தொடர்பான விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதுதொடர்பாகவும், ஆராய்ந்து முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதால் சகல உரிமையாளர்களையும் பங்குபற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. (ஐ 7-6)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 19

சுன்னாகம் றோட்டரக்ட் கழகம் இணுவில் மத்திய சந்தை மைதானத்தில் நடத்தி வரும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டமும் காட்சி ஆட்டமும் இன்று மாலை 4 மணி முதல் இடம்பெறவுள்ளன.

இறுதி ஆட்டத்தில் பல்கலைக்கழக அணியும் கே. கே. எஸ் ஐக்கிய வி. க. அணியும் மோதுகின்றன.

காட்சி ஆட்டத்தில் பல்கலைக்கழக பெண்கள் அணியும் நெல்லியடி பிரதேச சபை பெண்கள் அணியும் பங்குபற்றவிருக்கின்றன.

(ஐ-3)

★ ★ ★

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஈ எஸ். பேரம்பலம் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். இந்துக் கல்லூரியில் நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் அரையிறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ காலை 8 30 மணி — ஜொலிஸ்ரார் வி. க. எதிர் ஜொனியன்ஸ் வி. க.

★ பிற்பகல் ஒரு மணி — யங்ஸ்ரார் வி. க. எதிர் மானிப்பாய் பரிஷ் வி. க.

(ஐ-3)

அத்தியடியில் சில தினங்களாக அடாவடித்தனம்:

# மாணவர் குழுவைத் தேடி பொலிஸார் வலைவிரிப்பு!

## ஒருவர் கைதாகி விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், மே 19

யாழ்ப்பாணம் அத்தியடிப் பகுதியில் அடாவடித்தனங்களில் ஈடுபட்ட மாணவர் குழு ஒன்றைத் தேடிப் பொலீஸார் வலை விரித்துள்ளனர்.

கடந்த சில தினங்களாக இந்த மாணவர் குழு அத்தியடிப் பகுதியில் அடாவடித்தனங்களிலும் வன்முறைகளிலும் ஈடுபட்டு வந்ததாகப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

தமது முகங்களை துணிகளால் மூடிக் கட்டியபடி கத்திகள் பொல்லுகள் சைக்கிள் செயின்கள் ஆகியவற்றுடன் திடீரென மாலை நேரங்களில் தோன்றும் இக்குழு அத்துமீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததாகவும் —

அந்தப் பகுதியில் உள்ள சட்டத்தரணி ஒருவரின் வீட்டுக்குள் நுழைந்து இந்தக் குழுவினர் தாக்குதல் நடத்தியதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இவர்களின் காடைத்தனத்தைப் பொறுக்க முடியாத அப்பகுதி மக்கள் பொலீஸாரிடம் முறையிட்டனர். இதனை அடுத்து கடந்த புதன்கிழமை மாலை, இவர்கள் அட்டகாசம் புரிந்து கொண்டிருந்த வேளை அப்பகுதிக்கு விரைந்து வந்தனர் பொலீஸார்.

அதை அடுத்து அந்த மாணவர்கள் சைக்கிள்களையும் கைவிட்டுவிட்டு அங்கிருந்து தலைதெறிக்கத் தப்பியோடி விட்டனர். அவர்கள் கைவிட்டுச் சென்ற சில சைக்கிள்களைப் பொலீஸார் மீட்டு எடுத்துச் சென்றுள்ளனர்.

### மாணவன் கைது

இதே வேளை —

சட்டத்தரணியின் வீடு தாக்கப்பட்டது தொடர்பாக சந்தேகத்தின்பேரில் அப்பகுதியில் வசிக்கும் — நகரின் பிரபல பாடசாலையில் கற்கும் — மாணவன் ஒருவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் காலை பொலீஸார் இவரை யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்தனர். இவருடன் இணைந்து அடாவடித்தனங்களில் ஈடுபட்டவர்களைக் கைது செய்து விசாரணைகள் பூர்த்தியாகும் வரை சந்தேக நபரைப்பிணையில் விட வேண்டாம் என்று பொலீஸார் நீதிவானிடம் கேட்டுக் கொண்டனர்.

அதனை ஏற்றுக்கொண்ட நீதிவான், சந்தேக நபரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

முறைப்பாட்டுக்காரரான சட்டத்தரணியின் வீட்டுக்குப் பொலீஸ் பாதுகாப்பு வழங்குமாறும் அப்பிரதேசத்தில் அமைதியை ஏற்படுத்த ரோந்துப் பணிகளில் ஈடுபடுமாறும் நீதிவான் யாழ். பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டார். தேவை ஏற்படின் 512 ஆவது படைப்பிரிவின் உதவியை நாடவும் பொலீஸாருக்கு நீதிவான் அனுமதி வழங்கினார்.

### சகா ஆஸ்பத்திரியில்

சந்தேக நபரின் சகா எனக் கருதப்படும் மற்றொருவர் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருவதாக முறைப்பாட்டுக்காரர் நீதிமன்றில் தெரிவித்தார்.

குறித்த நபரை வைத்திய சாலையில் பொறுப்பேற்று உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நீதிவான் பணிப்புரை விடுத்தார்.

அதேசமயம்—

முறைப்பாட்டுக்காரரான சட்டத்தரணியின் கணவரும் அயலவர் ஒருவரும் தமது வீட்டுக்கு கத்தியுடன் வந்து மிரட்டி விட்டுப் போனதாக சந்தேக நபரின் பெற்றோர் நீதிவானிடம் முறையிட்டனர்.

அவர்களின் வாக்கு மூலங்களைப் பெற்று தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நீதிவான் பொலீஸாரைப் பணித்தார்.

(ம - 9)

## தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தையல் நிறுவனத்திற்கு ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியரின் ஆடைகள் வெட்டுவதில் அனுபவம் வாய்ந்தவர்களும் மேற்படி ஆடைகள் தைப்பதில் அனுபவம் வாய்ந்தவர்களும் மேற்படி நிறுவனத்தை நிருவகிப்பதிலும் (Management) அனுபவம் வாய்ந்தவர் தேவை

(திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும். 31-05-2001 திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்)

வீ. இல. 1286: மே.பா உதயன்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(87961)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை
செல்வி க. அங்கயற்கண்ணி
அவர்களின் அன்புத் தந்தையார்

### நா. கனகசபாபதி

அவர்களின் மறைவு குறித்து எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைவதாக.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்

(87967)

## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரும்
எமது பாடசாலையின் பழைய மாணவருமான
திரு. வீ. இராசையா
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி மீனாட்சி - வீரகத்தி

அவர்களின் மறைவு குறித்து எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்கி அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்,
மாணவர்கள்.

யா/ இமையாணன் அரசினர்
தமிழ்க் கலவன் வித்தியாலயம்.

(87966)

## இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், மே 19

சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றிய வடமராட்சிக் கிளையின் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரம்மஸ்ரீ ப. மனோகரக்குருக்கள் தலைமையில் மாலிசந்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அங்கத்தவர்கள் அனைவரையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க-10)

## மெய்வன்மைப் போட்டிகள்

வலி. மேற்கு, மே 19

மூளாய் உதயசூரியன் விளையாட்டுக்கழகமும் மூளாய் இந்து இளைஞர் மன்றமும் இணைந்து நடத்தும் வருடாந்த மெய்வன்மைப் போட்டி, நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் மன்றத்தின் முன்றிலில் நடைபெறவுள்ளது.

உதயசூரியன் விளையாட்டுக் கழகத் தலைவர் கா. பார்த்தீபன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தப் போட்டியில், பிரதம விருந்தினராக வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதனும் சிறப்பு விருந்தினர்களாக பிரதேச செயலர் கலாநிதி அ. குணராஜா உட்பட இன்னும் பல பிரமுகர்களும் கலந்து கொள்வர்.

(க-175)

* * *

கோப்பாய், மே 19

உரும்பிராய் புனித மிக்கேல் சனசமூக நிலைய முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு சனசமூக முன்பள்ளி நிலையத் தலைவர் நா. இராசநாயகம் தலைமையில் நடைபெற உள்ளது.

பிரதம விருந்தினராக வலி. கிழக்குப் பிரதேசசபைத் தலைவர் பூ. குணசிங்கம் கலந்து கொள்வார். (ஐ-72)

## மரண அறிவித்தல்கள்

### சங்கரப்பிள்ளை வைத்தியநாதர்

(ஓய்வுபெற்ற கணித ஆசிரியர், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி)

பத்தாவத்தை இளவாலையைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை வைத்தியநாதர் அவர்கள் லண்டனில் சிவபதமடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற செல்வநாயகிப்பிள்ளையின் அன்புக் கணவரும், Dr. சற்குணநாயகத்தின் அருமைத் தந்தையாரும், இராஜலக்ஷ்மியின் அன்பு மாமனாரும், குகனின் பாசமிகு பேரனும்' ஆவர்.

தகனக்கிரியைகள் 17 05-2001 அன்று லண்டனில் நடைபெற்றன.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

Dr. V Satkunanayagam
Telephone:- 44 - 1372813265.

Address:-
10, Kendor Avenue,
EPSOM,
U. K.
Post code:- KT 198 R. H.

(87964)

### திருமதி நடராஜா அருளம்மா

கரணவாய் தெற்கு 'சித்தம்பாதி'யைச் சேர்ந்த திருமதி நடராஜா அருளம்மா அவர்கள் 13-05-2001 ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் வல்லிபுரம் நடராஜா (சவுதி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பாலசுந்தரம், லட்சுமி ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் தம்பதிகளின் மருமகளும், நதியாவின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ஐ. சின்னத்தம்பி, பா. சோமசுந்தரம் (லண்டன்), திருமதி க. சாந்தம்மா, பா. கலைஞானசுந்தரம் (சவுதி) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-5-2001) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வெல்லன்கிராய் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. இராசன்
(மருமகன்)

'அம்பாள் அகம்'
சித்தம்பாதி,
கரணவாய் தெற்கு.

(87953)

### கதிரவேலு சுந்தரமூர்த்தி உமாசரன்

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரமூர்த்தி உமாசரன் அவர்கள் 15-05-2001 அன்று வவுனியாவில் காலமாகி விட்டார்.

அன்னார் பொலிகண்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி இராசம்மா ஆகியோரின் அன்பு மகனும், புவனராஜேஸ்வரியின் (புவனா மேல் நீதிமன்ற சுருக்கெழுத்தாளர், வவுனியா) அன்புக் கணவரும், நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த திரு. கா. மு. சின்னத்துரை (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்), வள்ளியம்மை (இளைப்பாறிய தாதி) ஆகியோரின் அன்பு மருமகனும், சிவாநந்தன் (ஓமான்), இரவீந்திரன் (சுவிஸ்), சிவகுமார் (டென்மார்க்), பரணீதரன் (நோர்வே), காலஞ்சென்ற கேமமாலினி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கலாரஞ்சனி (கொழும்பு), ரஜனி (கனடா), காந்திமதி (கொழும்பு), சுகந்தி (நோர்வே), இராஜராஜேஸ்வரி, நகுலராஜேஸ்வரி, கேதீஸ்வரராஜா (கொழும்பு), குருபரராஜா (ப.அ.ச. யாழ்ப்பாணம்), பாலராஜேஸ்வரி (ஜேர்மன்), மங்களராஜேஸ்வரி (ஆசிரியர் புங்குடுதீவு ம.வி), சக்தீஸ்வரராஜா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பாலச்சந்திரன் (கிராமசேவகர் -யாழ்.), விஜயகுமாரன் (முகாமி - லண்டன்), ரதிகலா (கொழும்பு), துஷ்யந்தினி (கொமர்சல் வங்கி - யாழ்), நித்தியராஜா (ஜேர்மன்), கருணாநந்தன் (கோல்டன் சக்கின்) ஆகியோரின் சகலனும், சிவாஜினி, மாருதி, சதாரன், அஸ்வினி, சிந்தியா, இநோர்ஜ், பிரசன்னா, பிரசாத், பிரதாப், பிரதீப், கோபிகா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், தனுஷா, மானுஷா, சயந், அஜந், பிரிஜந், ஜானுகா, ஜனார்த்தனன், சாயிவீணா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், ஆதவன், மகிழ்ருதன், ஆரணி, சாணவி, ஆர்த்திகா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (20-05-2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு வவுனியாவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சொ. பாலச்சந்திரன்,
கிராம உத்தியோகத்தர்

வவுனியா முகவரி:
நீதிமன்றக் கட்டடத் தொகுதி,
வவுனியா.
தொ. பேசி. இல: 024/23373.

சிறாம்பியடி.
இல. 30 யாழ்.வீதி,
யாழ்ப்பாணம்.

(87956)

உதயன்

## ஹக்கீமின் மிடுக்கு!

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்களைத் தொடங்குவதற்கு முன்னர் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவர் என்று செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. உத்தேச புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அடக்கப்பட வேண்டிய அம்சங்கள் குறித்து இன்னும் இணக்கப்பாடு எட்டப்படவில்லை என்பதும் செய்தி.

ஜனாதிபதி இந்தியா சென்றிருந்த வேளை, புரிந்துணர்வு ஒப்பந்தம் என்று ஒன்றில்லை; மனிதாபிமான நடவடிக்கைகள் குறித்த இணக்கப்பாடு ஒன்று குறித்துத்தான் ஆராய்ந்து வருகிறோம் என வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறி சர்ச்சையைக் கிளப்பியதையும் மறப்பதற்கில்லை.

ஆனால், உத்தேச புரிந்துணர்வு உடன்பாடு, சட்ட வலுமிக்க பிரகடனமாக்கப்பட வேண்டும் என அரசாங்கம் விரும்புவதாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷமன் கதிர்காமர் ஆகப் பிந்தித் தெரிவித்திருக்கிறார். எப்படியோ, அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை அல்லது பிரகடனம் என்ற பெயரில் ஒன்று வெளிப்படும் என்பது இப்போது நிச்சயமாகி விட்டது.

சமாதான முயற்சிகள் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் இறுதி வடிவம் சம்பந்தமாகத் தீர்க்கமான முடிவு இன்னும் எட்டப்படாத சூழ்நலையில், ஜனாதிபதி தமது அமைச்சரவைச் சகா ஒருவருடன் புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றைச் செய்வதில் மிகத் தீவிர அக்கறையுடன் இருப்பதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன!

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி இரண்டாவது தடவையாகவும் ஆட்சிக்கு வருவதற்கு தேசிய ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற வாக்குகளே பெரிதும் உதவின. அந்தக் கட்சி நினைத்தால் எந்த நேரமும் அரசாங்கத்தை நிலை தடுமாற வைக்கலாம்.

இத்தகைய ஒரு பின்னணியில் மாவனல்ல பகுதியில் சிங்கள-முஸ்லிம் கலவரம் வெடித்தது. அந்தக் கலவரத்தை அடக்குவதற்கு அரசாங்கம் தவறிவிட்டது என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் கருத்து வெளியிட்டிருந்தார். அமைச்சராக இருந்து கொண்டு ஹக்கீம் அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தியதை ஜனாதிபதியால் சகிக்க முடியவில்லை. தமது கட்சிக் கூட்டத்தில் ஹக்கீமைக் கடுமையாகக் கண்டித்தார்.

இதனை ஒரு துரும்புச் சீட்டாகப் பயன்படுத்த நினைத்தார் அமைச்சர் ஹக்கீம். சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த எதிர்க்கட்சிக்கும் ஹக்கீமை கைக்குள் போட ஒரு தருணம் கிடைத்தது. அரசுக்கு எதிராக ஐ.தே.கட்சி கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு கேட்டிருந்தார் ரணில்.

சந்திரிகா சாடியதைப் பொறுக்க முடியாத ஹக்கீம் "விட்டேனோ பார், எனது சக்தியைக் காட்டுகிறேன்" என்ற தோரணையில் ரணிலுடன் நீண்ட நேரம் தொலைபேசியில் பேசினார்.

ஜனாதிபதி சந்திரிகா அல்லாடிப் போனார்! ஐக்கிய தேசியக் கட்சியின் நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தமிழ்க்கட்சிகள் ஆதரித்து விடக்கூடாது என்பதற்காக அரசு-புலிகள் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான அடித்தளம் இடப்பட்டு விட்டதாக கதிர்காமரின் அமைச்சை அறிக்கை வெளியிட வைத்தவர் அல்லவா அவர். ஹக்கீமின் ஆதரவை இழக்க முடியுமா, என்ன?

ஹக்கீமை அவசர அவசரமாக அழைத்தார். அப்படி எதுவும் செய்து விட வேண்டாம். நீங்கள் கேட்ட எல்லாக் கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தருகிறேன்; வேண்டுமானால் புரிந்துணர்வு ஒப்பந்தமும் செய்து கொள்கிறேன் என்று அவரின் காலடியில் விழுந்தார்!

பத்து நாடாளுமன்ற ஆசனங்களை திரட்சியாக வைத்திருப்பதால் ஹக்கீமினால் அரசாங்கத்தை ஆட்டிப் படைக்க முடிகிறது. திரட்சியின் மிடுக்கு அவருக்கு. ஆனால், வடக்கு -கிழக்கில் மட்டும் 14ஆசனங்களைக் கொண்ட தமிழ் எம்.பிக்கள் திக்குத் திக்காக நிற்பதால் அவர்களால் எதனையும் சாதிக்க முடியவில்லை. வெறுமனே வாய் வடைவாளங்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்...! அறிக்கைப் போர் நடத்துவதிலேயே அவர்கள் தீராதி தீரர்கள்! அதனைத்தான் அவர்களால் செய்யமுடியும்...! ஒற்றுமை என்பது அவர்களுக்கு ஒவ்வாமை!!

### கண்ணிவெடியில் சிக்கி

# அங்கவீனமடைந்தவர்களுக்கு முச்சக்கர வண்டிகள் வழங்கப்படும்

## சர்வதேச சமாதான அமைப்பு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே19

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கண்ணிவெடிகளால் அங்கவீனமடைந்தவர்களுக்கு முச்சக்கர வண்டிகளை அன்பளிப்புச் செய்ய சர்வதேச சமாதான அமைப்பு முன்வந்துள்ளது.

கண்ணிவெடிகளில் சிக்கி அங்கவீனமானவர்கள் தமது பெயர் விவரங்களை கொழும்பிலுள்ள சர்வதேச சமாதான அமைப்புக்கு அனுப்பி முச்சக்கர வண்டிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் சர்வதேச சமாதான அமைப்பு, இல.180/34, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு - 14 என்ற முகவரிக்கு தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு -

யாழ்பாதுகாப்புத் தலைமையகம் நேற்று முன்தினம் விடுத்த செய்திக் குறிப்பில் அறிவித்துள்ளது. (ஓ)

# மிதிபலகையில் நிற்பவர்களிடம் எச்சரிக்கையாக இருங்கள்

எந்த விதிகளுக்கும் நடைமுறையில் சில விதிவிலக்குகளும் இருக்கின்றன - இருக்க வேண்டும். போக்குவரத்துச் சபை பேருந்துகளில் பின் கதவால் தான் ஏறவேண்டும். முன் கதவால்தான் இறங்க வேண்டும் என்பது விதி. ஆனால் நெரிசல் மிகுந்த சமயங்களில் முன் கதவால் ஏறுவதும் பின் கதவால் இறங்குவதும் பயணிகள், பேருந்து ஊழியர்கள் ஆகிய இரு சாராருக்குமே வசதியாக இருக்கவும் கூடும். அந்தச் சமயங்களில் போக்குவரத்து விதிகள் இத்தனையாம் சட்டத்தின் இத்தனையாம் பிரிவின்படி அது சட்டமீறல் என்று சட்டம் பேசிச் சத்தம் போட வேண்டுமா என்ன? தென்னிலங்கையைப் பொறுத்தவரை அப்படியான, நெருக்கடியான சமயங்களில் சட்டத்தை அவ்வளவு தூரம் 'இறுக்கிப்' பிடிப்பதில்லை. பின் கதவாலும் இறங்க விடுவார்கள் முன் கதவாலும் ஏற விடுவார்கள். பயணச் சீட்டைப் பெறுவதும் பெறாமல் விடுவதும் பயணியின் வல்லமையைப் பொறுத்தது.

இதுபோல வெள்ளவத்தைக்குப் பயணச்சீட்டுப் பெற்றவர்கள் பொலீஸ் நிலையத்துக்கு முன்னாலுள்ள தரிப்பில் இறங்கியாக வேண்டும். அதற்கடுத்த இரண்டு தரிப்பிடங்கள் கூட வெள்ளவத்தைதான் என்றாலும் அவர்கள் மொழியில் அவைகள் தெகிவளைக்குள் அடக்கம்.

இதனை எம்மவர்களும் புரியும் படியாகச் சொல்லுகிறேன். அளவெட்டி-யாழ்ப்பாணம் பேருந்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு அருகே ஏறி சுன்னாகம் பேருந்து நிலையம் வரை மூன்று ரூபா கட்டணத்துடன் பயணம் செய்யலாம். ஆனால் கல்லூரிக்கு இரண்டு மூன்று தரிப்புகளுக்கு அப்பாலுள்ள ஆலடியிலிருந்து அதைவிடக் குறுகிய தூரமான சுன்னாகம் பேருந்து நிலையத்துக்கு அடுத்த தரிப்புக்கு அதே கட்டணத்தில் செல்ல முடியாதல்லவா? இது போன்றதொரு சிறிய சட்டச் சிக்கல்தான் இந்த வெள்ளவத்தைப் பிரச்சினையும்.

இந்தவகையில் பார்க்கப்போனால் நாம் அங்கு செய்தது சட்டமறுப்புத்தான். அதாவது வெள்ளவத்தைச் சீட்டுடன் வெள்ளவத்தையிலுள்ள தெகிவளையில் இறங்குவோம். நடத்துநர்களும் பெரும்பாலும் இதுபற்றி அதிகம் கண்டிப்புக் காட்டுவதில்லை. கண்டும் காணாதது போல இருந்துவிடுவார்கள்.

இப்படி இன்னும் சில வரவேற்கத்தக்க அம்சங்களையும் தென்னிலங்கை பேருந்துப் பயணங்களின் போது காணமுடியும்.

பேருந்துகளில் இருக்க இடமின்றி நின்று பயணம் செய்பவர்களிடமிருந்து அவர்கள் கைவசமுள்ளவைகளை (பொதிகள், புத்தகங்கள், கைப்பைகள்) இருக்கைகளில் இருப்பவர்கள் வாங்கித் தம்முடன் வைத்திருந்து அவர்கள் இறங்கும் போது அல்லது அவர்களுக்கு இடம் கிடைக்கும் வரை வைத்திருப்பார்கள். எவ்வளவு 'குண்டு' அச்சுறுத்தல் இருந்தபோதிலும் அங்குள்ள பயணிகள் இந்த நல்ல பண்பாட்டைப் பின்பற்றி வருகிறார்கள்.

நினைக்க.... ....சிந்திக்க

அதேபோல கைக்குழந்தையுடன் ஏறுபவர்களுக்கு - அது குழந்தையா குமரா என்ற ஆராய்ச்சியின்றி ஏறிய உடனேயே-பேருந்தை மீண்டும் எடுப்பதற்கு முன்னரே- இருப்பவர்கள் யாராவது இடம் கொடுத்தாக வேண்டும். இல்லாவிட்டால் அங்கு பெரிய குழறல்தான். (அந்த வேகம் இங்கு இல்லை) தமிழ்நாட்டில் பேருந்துகளில் இடம் இருக்கிறதுதானே என்று பெண்களுக்குப் பக்கத்தில் ஆண்கள் எவரேனும் இங்குள்ள பழக்கம் காரணமாக இருக்கப்போனாலும் இந்த அநுபவம் தான். (இப்பொழுதும் அங்கு அப்படித்தானோ தெரியவில்லை)

இங்குள்ள ஒருசில பேருந்துகளில் பலத்த சத்தத்தில் பாடாவாரிப் பாடல்களைப் போட்டு பயணிகளின் பொறுமையைச் சோதிக்கிறார்கள். பேருந்து நிலையத்தில் தன் போக்கில் திரியும் மனநலம் குன்றிய ஒருவர் இத்தகைய 'பாட்டு பஸ்'ஸைத் தேடி மாறி மாறி ஏறி இறங்குவதையும் கவனித்திருக்கிறேன். இப்படியான 'அரியண்டங்கள்' தென்னிலங்கை போக்குவரத்துச் சபை பேருந்துகளில் கிடையாது. சில தனியாரதும் சொகுசு பஸ்களிலும் தான் இந்த 'அரியண்டங்கள்' இருக்கும்.

அங்குள்ள சில விரும்பத்தகாதவைகள் என்றால் பிச்சைக்காரர்கள் தொல்லைகளையும் 'பிக்பொக்கட்' டையும் சொல்லலாம். இங்கு பேருந்து நிலையத்தில் நிற்கும் பேருந்துகளில் மட்டுமே பிச்சைக்காரர்கள் ஏறித் தருமம் கேட்பார்கள், பேருந்து புறப்படுமுன் இறங்கியும் விடுவார்கள். அங்குள்ள நிலைமையுடன் ஒப்பிடும் போது இது பரவாயில்லை எனலாம். அங்கு ஓடும் பேருந்துகளிலேயே இவர்கள் ஏறி இன்னுமொரு தரிப்பிடத்தில் இறங்குவார்கள். அதுவரை பயணிகள் பாடு திண்டாட்டம் தான். பிச்சைக்காரர்களிலும் ஏதாவது ஒரு இசைக் கருவி சகிதம் கச்சேரி வைப்பவர்கள் .. வேடிக்கை காட்டுபவர்கள்.... கையை முழங்கை வரை மடித்து அதனைத் தங்கள் விலாப்பகுதியில் அடித்து அடித்து பலத்த 'நெட்டி' ஓசை எழுப்பி... அதையே பக்கவாத்தியமாகக் கொண்டு பாடுபவர்கள்... இப்படிப் பலரகத்தினர்... இதெல்லாம் போக்குவரத்துச் சபை பஸ்களில் மட்டும் தான். அப்படி அவர்கள் அதில் இலவசமாக ஏறி இறங்குவதற்கும் அனுமதி இருக்கிறது போலும்.

அங்குள்ள போக்குவரத்துச் சபை பேருந்துகள் சிலவற்றில் உள்ளே இடமிருந்தாலும் ஒரு கூட்டம் வாசலையும் மிதிபலகையையும் அடைத்துக் கொண்டு பயணிகளுக்கு இடைஞ்சலாக நிற்பார்கள். இவர்களை யாரும் கட்டுப்படுத்த முடியாது. இவர்களில்தான் 'பிக்பொக்கட்' ஆசாமிகளும் இருப்பார்கள்... இந்தத் தொல்லையும் இங்கு இல்லைத்தானே!

இந்த ஒப்பீட்டை எதற்காகச் செய்தேன் என்கிறீர்களா? சட்ட மறுப்பு நீங்கலாகவுள்ள அங்குள்ள நல்லவைகளை நாமும், இங்குள்ள நல்லவைகளை அவர்களும் பின்பற்றினால் நன்றாக இருக்குமே என்ற நல்லெண்ணம் தான்.

அடுத்த கட்டுரை: 'நாய் வாலை நிமிர்த்தினாலும் இந்த விதானைமார்களை...'

*- சணி அங்கிள்.*

## நாளை

வைகாசி 6
ஞாயிற்றுக்கிழமை
திதி: துவாதசி
முற்பகல் 9.53 வரை
நட்சத்திரம்: ரேவதி
முற்பகல் 11.01 வரை
பிரதோஷ விரதம்
சுபநேரம் : 8.52 - 10.22
ராகுகாலம் : 4.22 - 5.52
(பழைய நேரப்படி)

## செயலமர்வு ரத்து

யாழ்ப்பாணம்,மே19

யாழ்.இந்துமகளிர் கல்லூரியில் இன்று நடைபெற இருந்த ஆரம்பக் கல்வி மீள் செயலமர்வு நடைபெற மாட்டாது என நல்லூர் கோட்டக் கல்வி அதிகாரி திருமதி காங்கேயன் தெரிவித்துள்ளார். (ம)

## உதயவாக்கு

குடும்ப வாழ்க்கையை மேன்மைப்படுத்துவது அன்பு.

## நாட்டு நடப்பு

முன் ஆசனத்தில் வீற்றிருந்த தொன்று
முழுக் குடுமி மாலை அத்தர் காப்பு
இன்பமுறத் தொட்டு விளையாட
இடம் கொடுத்தே நெளிந்தந்த மாது
'இன்ரேவல்' மணி அடிக்க வெளிச்சம்
இன்பமுற இவன் மாதை பார்த்தான்
முன் இருந்தது சிவ ஸ்ரீ குருக்கள்
முணுமுணுத்தார் "சொறி" என்று கொஞ்சம்.

*- மு.திருநாவுக்கரசு.*

# பெருகிவரும் குற்றங்கள், வன்முறைகளை கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை

## கட்சிகளையும் தனியாரையும் உதவுமாறு அழைப்பு

கொழும்பு,மே19

வடக்கு - கிழக்கு யுத்தத்தின் விளைவாக இராணுவத்தில் இருந்து தப்பியோடும் படையினர் சிலரால் கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகள், தற்போதைய அரசியல் கலாசாரம் ஆகியன காரணமாக இடம்பெறும் கொடுமைகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் பாரிய திட்டமொன்றை வகுத்துள்ளது. இத்திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்த சகல அரசியல் கட்சிகளினதும் தனிப்பட்டவர்களினதும் ஒத்துழைப்பை வழங்குமாறு அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நீர்கொழும்பு பாதிரியார் அபாகொஸ்தா படுகொலையையும் கடலாதெனிய பேராதனை விகாரையில் மேற்கொள்ளப்பட்ட புராதன சின்னக் கொள்ளையையும் ஜனாதிபதி வன்மையாகக் கண்டிக்கிறார் என்று அரசாங்கம் தகவல் திணைக்களம் மூலம் அறிவித்துள்ளது.

இது குறித்து நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புராதன பெருமை மிக்க இவ்வாறான விகாரைகளைக் கீழ்த் தரமான நோக்கத்துடன் அழித்தவர்களை, நீர்கொழும்புப் பிரதேசத்துக்கு மட்டுமன்றிப் பொதுவாக முழு நாட்டுக்கும் பெரும் சேவையாற்றிய அபாகொஸ்தா போன்ற மதத் தலைவர்களைப் படுகொலை செய்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கும்படி அரசாங்கம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

பொ.ஐ.மு. அரசாங்கம் ஆட்சிக்கு வந்த நாள் தொடக்கம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக கொலை, கொள்ளை போன்ற குற்றச் செயல்கள் வெகுவாகக் குறைந்தாலும் இந்த எண்ணிக்கைகள் திருப்திகரமானவை அல்ல.

1994ஆம் ஆண்டுக்கு முன் இந்நாட்டில் காணப்பட்ட அரச பயங்கரவாதம் மற்றும் வடக்கு - கிழக்கில் செயற்பட்டு வந்த அரசியல் குழுக்கள் சிலவற்றினால் எடுக்கப்பட்ட பயங்கரமான சூழ்நிலையின் விளைவாக இலங்கை முழுவதும் வன்முறை அரசியல் கலாசாரத்தையே இன்று நாம் காண்கின்றோம். இந்நிலைமையின் கீழ் ஏற்படுத்தப்பட்ட வடக்கு - கிழக்கு போரின் ஒரு விளைவாக இராணுவத்தில் இருந்து தப்பியோடும் படையினர் சிலர் மேற்கொள்ளும் வன்முறையும் மறுபுறம் எஞ்சியுள்ள பயங்கர சூழ்நிலையும் இந்தக் கொடூரமான செயல்களுக்குக் காரணம் எனலாம். இந்நிலைமைகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தெளிவான யதார்த்த பூர்வமான நோக்கோடு பல தரப்பட்ட பிரிவுகளுடன் செயற்பட்டு வருகின்றது. (க)

## வீடியோ படக் காட்சி

யாழ்ப்பாணம்,மே19

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கும் திரைப் படக் காட்சித் தொடரில் இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் சேகர் கபூரின் 'பாண்டிற் குயின்' என்ற திரைப்படம் காண்பிக்கப்படும் (ம)

# கொழும்பில் 113 விடுதிகள் மீண்டும் இயங்க அனுமதி

கொழும்பு,மே19

கொழும்பிலுள்ள பல தங்குமிட விடுதிகளுக்கு (லொட்ஜ்) இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரங்களை மீண்டும் வழங்குவதற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தேசிய சுகாதார வாரம் நிறைவு பெற்றதும், இம்மாத இறுதியில் 113 லொட்ஜ்களுக்கான அனுமதிப் பத்திரங்களை மீண்டும் வழங்கும் கருமம் ஆரம்பமாகுமென கொழும்பு மாநகர சபையின் பொது சுகாதார அதிகாரி பி.ஜே.வீரசிங்க தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு மற்றும் சுகாதாரக் காரணங்களைக் கருத்திற்கொண்டு கொழும்பு நகரில் 113 தங்குவிடுதிகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தன என்பது தெரிந்ததே. (க)


## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!

கண்ணிகள் உண்டு கால்களே கவனம்!
மறந்தால், நின்றுவிடும் உங்கள் வாழ்க்கைப் பயணம்!



# வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச்சேவையின் தொழில் நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) வகுப்பு II பிரிவு "ஆ" / தொழில் நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பயிற்சித் தரம் / தொழில்நுட்ப உத்தியோகத்தர் (பட வரைஞர்) பயிற்சித் தரம் ஆகிய பதவிகளுக்கான ஆள்சேர்ப்பு - 2001

**வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவையில் வெற்றிடமாகவுள்ள தொழில் நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) வகுப்பு II பிரிவு "ஆ"/தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பயிற்சித் தரம் / தொழில்நுட்ப உத்தியோகத்தர் (பட வரைஞர்) பயிற்சித் தரம் ஆகிய பதவிகளுக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்காகக் கீழே குறிப்பிடப்பட்ட தகைமையுடைய ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். இறுதித்திகதி 17.06.2001 ஆகும்.**

02.ஆள்சேர்ப்புக்கான சேவை நிபந்தனைகள்:-

1. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். நியமனம் பெறுபவர்கள் விதவைகள், அநாதைகள்/ தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு உதவு தொகை செலுத்துதல் வேண்டும்.
2. (இது ஓர் இடமாற்றச் சேவையாகும்) இந்நியமனம் பெறுபவர்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.
3. பந்தி 4 உ i இன் கீழ் குறிப்பிட்ட தகைமைகளை பெற்றுள்ளவர்கள் வகுப்பு II"ஆ" பிரிவுக்கு சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். அவர்கள் 3 வருடகாலத்துக்கு தகுதி காண் நிலைக்கு உட்படுத்தப்படுவார்கள்.
4. பந்தி 4 உ ii இன் கீழ்க் குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டவர்கள் பயிற்சித் தரத்துக்கு முதலில் உட்படுத்தப்படுவார்கள். அவ்வாறு பயிற்சித்தரத்துக்கு உட் படுத்தப்பட்டவர்கள் ஒருவருட தத்துவ மற்றும் செய்முறைப் பயிற்சிக் காலத்தைச் சிறந்த முறையில் பூர்த்தி செய்த பின்னர் வகுப்பு II பிரிவு "ஆ"விற்குச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். பயிற்சியின் பின்னர் நடத்தப்படும் பரீட்சையில் சித்தி பெற்ற வர்களும், பயிற்சி பெற்ற கால எல்லைக்குள் வேலை, நடத்தை, வரவு என்பன திருப்திகரமானதாக இருப்பவர்களுமான பயிற்றப்பட்டவர்கள், சிறந்த முறையில் பயிற்சி பெற்றவர்களாகக் கருதப்படுவர். பயிற்சியைச் சிறந்த முறையில் பூர்த்தி செய்யாத பயிலுநர்கள் வகுப்பு II பிரிவு "ஆ"விற்கு சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள். அத்துடன் அவர்கள் பயிற்சியிலிருந்தும் நீக்கப்படலாம்.

03.சம்பள அளவுத் திட்டங்கள்

**பொது நிர்வாக சுற்றறிக்கை 2 - 97 (III) ற்கு அமைவாக**

i. தொழில் நுட்ப உத்தியோகத்தர் (சிவில் வகுப்பு II பிரிவு "ஆ")
ரூபா 51,840 - 7X1,320 - 10X1,560 - 76,680 (T-3-1-1)

ii. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பயிற்சித்தரம்
ரூபா 49,200 - 1X1,320 - 50,520

iii. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (படவரைஞர்) பயிற்சித்தரம் :
ரூபா 49,200 -.1X1,320 - 50,520

04.தகைமைகள்:

அ. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ஆ. அவர் சிறந்த தேக ஆரோக்கியமும் நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

இ. விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுதிகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில்/மாகாண அரச சேவையில் இருப்பவர்களுக்கு உச்சவயதெல்லை ஏற்புடையதல்ல)

ஈ. விண்ணப்பதாரி வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வதிபவராக இருத்தல் வேண்டும். அதாவது இவ் விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னர் உள்ள 6 ஆண்டுகாலப் பகுதியில் ஆகக் குறைந்தது 3 ஆண்டுகளிலாயினும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வசித்திருத்தல் வேண்டும்.

*குறிப்பு:* வடக்கு - கிழக்கு மாகாணத்தை பிறப்பிடமாக அல்லது நிரந்தர வதிவிடமாக கொண்டிருந்தபோதிலும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து வேறு மாகாணங்களிலே தற்காலிகமாக வதிவோரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். அவ்வாறாயின் அவர்கள் தமது தற்போதைய தற்காலிக வதிவிடத்தை நிரந்தர வதிவிடம் எனக் காண்பித்து வேறு பதவிகளுக்கு விண்ணப்பித்திருத்தல் கூடாது. அவ்வாறெனில் அதனை அத்தாட்சிப்படுத்தும் ஆவணமும் இடம்பெயர்ந்து தற்காலிகமாக வசிப்பதை உறுதிப்படுத்தும் ஆவணமும் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

உ. கல்வித்தகைமைகள்:

**I தொழில் நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) வகுப்பு II பிரிவு "ஆ"விற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளில் ஏதாவது ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும்.**

1. மொறட்டுவ பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி தொழில் நுட்பவியல் நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில் நுட்பவியல் டிப்ளோமா
2. தேசிய பயிலுநர் மற்றும் தொழில் நுட்பப் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமாச் சான்றிதழ்
3. கல்வி, உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா
4. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில் நுட்பவியல் டிப்ளோமா
5. இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடத்தப்படும் பொறியியல் பரீட்சையில் முதலாம் பகுதியை திருப்திகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்
6. மேலே குறிப்பிட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்குச் சமமானதென வடக்கு-கிழக்கு மாகாண, இலங்கை தொழில் நுட்பவியல் சேவை சபையினால் ஏற்றுக் கொள்ளப்படும் வேறு ஏனைய தகைமைகள்

**II. தொழில் நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பயிற்சித் தரத்துக்கு கீழே குறிப்பிடப்படும் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.**

அரசாங்க தொழில் நுட்பவியல் கல்லூரியில் தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் அல்லது வடக்கு - கிழக்கு மாகாண இலங்கைத் தொழில் நுட்பச் சேவைச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது தொழில் நுட்பத் தகைமைகள்.

அத்துடன்

க. பொ. த. (சா. த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் மொழி அல்லது இலக்கியம் , எண்கணிதம் அல்லது கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்திகளுடன் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தி உட்பட ஆறு பாடங்களில் சித்தி எய்தியிருத்தல் வேண்டும்.

**III. தொழில் நுட்ப உத்தியோகத்தர் படவரைஞர் (பயிற்சித்தரம்) பதவிக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.**

படவரைஞர் அலுவலர்களின் பயிற்சி நெறிச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமானது என வடக்கு - கிழக்கு மாகாண இலங்கைத் தொழில் நுட்பவியல் சேவைச் சபையினால் ஏற்றுக் கொள்ளப்படும் வேறு சான்றிதழ்கள்.

அத்துடன்

க. பொ. த. (சா. த) பரீட்சையில் இருதடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் மொழி அல்லது இலக்கியம், எண்கணிதம் அல்லது கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தி உட்பட ஆறு பாடங்களில் சித்தி எய்தியிருத்தல் வேண்டும்.

*குறிப்பு:* இவ்விண்ணப்ப முடிவு திகதிக்கு முன் மேற்குறிப்பிட்ட பரீட்சைகளின் பெறுபேறுகள் உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

05. ஆள்சேர்ப்பு முறை:

அங்கீகரிக்கப்பட்ட ஆளசேர்ப்புத் திட்டம், அரச சுற்று நிருபங்களுக்கு அமைவாக எழுத்துப் பரீட்சை/நேர்முகப் பரீட்சைப் பெறுபேற்றின் திறமை அடிப்படையில் விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்படுவர். எழுத்துப் பரீட்சை நடத்துவது கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும்.

06. எழுத்துப் பரீட்சை:

இப்பரீட்சை தமிழ்/சிங்களம் ஆகிய இரு மொழி மூலங்களிலும் நடத்தப்படும். இப்பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டதாக இருக்கும். இப்பரீட்சைக்குரிய பாடத்திட்டம் பின்வருமாறு:

1. பொது உளச்சார்பு - ஒரு (01) மணித்தியாலம் - 100 புள்ளிகள்.

சொற்றொடர்கள் எண்கள் பற்றியவை உருவ வடிவங்களில் கொடுக்கப்படுகின்ற சிக்கலான விடயத்தில் பரீட்சார்த்திகள் காட்டுகின்ற அனுமானங்கள் மற்றும் விடைகளை ஆதாரமாகக் கொண்டு அவ்வப் பிரச்சினைகள் தொ[illegible] கருத்துக் கிரகிப்பு, அளவீட்டுணர்தல் மற்றும் கால அவகாசங்களுக்கிடை[illegible] தொடர்[illegible]ளைப் புரிந்து கொள்வதில் பரீட்சார்த்திகளுக்கு இருக்கின்ற தி[illegible] அளவி[illegible] போன்றவை அடங்கும்.

2. பொது அறிவு - ஒரு (01) மணித்தி[illegible] [illegible] புள்ளிகள்.

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்ட[illegible]

பகுதி 1 - 50 புள்ளிகள்

சூழல், விஞ்ஞான அறிவு, உலக விஞ்ஞானத் தகவல்கள் தொடர்பாக பரீட்சார்த்திகள் பெற்றிருக்கின்ற அறிவையும் தெளிவையும் அளவிடுவதாக அமையும்.

பகுதி 11 (சிவில்) - 50 புள்ளிகள்

இப்பகுதி தொழில் நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவிகளுக்காக விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் விடையளிக்க வேண்டிய பகுதியாகும்.

இவ்வினாத்தாள் தொழில் நுட்ப உத்தியோகத்தரின் நிர்மாணம், கட்டட மேற்பார்வை, வீதி நிர்மாணமும் பராமரிப்பும், நீர்வழங்கல் வடிகால் அமைப்பு போன்றவற்றின் அறிவினையும் தெளிவையும் அளவிடுவதாக அமையும்.

பகுதி 11 (படவரைஞர்) - 50 புள்ளிகள்

இப்பகுதி படவரைஞர் பதவிகளுக்காக விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் விடையளிக்க வேண்டிய பகுதியாகும். இவ்வினாத்தாள் கட்டட நிர்மாணக் கலை ஆக்கங்கள் தொடர்பிலான அனுபவம், கட்டட நிர்மாணக் கலை பற்றிய அறிவு, பரிமாணத்துக்கேற்ப வரைதல், திட்டப்படமொன்றை அல்லது அண்ணளவான குறிப்பொன்றைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் மற்றும் அவற்றை மேம்பாடு செய்யும் ஆற்றல், கட்டட அமைப்பு நிர்மாணங்கள் தொடர்பிலான அடிப்படை அறிவு, அளவுகளைக் கணிப்பீடு செய்தல் தொடர்பிலான அறிவு, கேத்திர கணிதப் பொறிமுறை வரைதல் தொடர்பிலான அறிவு, வீட்டு மின் இணைப்புத் தொகுதிகளைத் திட்டமிடல், நீர் வழங்கல் வடிகால் அமைப்பு மற்றும் ஏனைய கட்டட சேவைகள் தொடர்பிலான அறிவு என்பவற்றைப் பரீட்சிக்கும் வினாக்களாக அமையும்.

07. பரீட்சைக் கட்டணம்:

விண்ணப்பதாரி வதியும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகம் ஒன்றில் ரூ 200 ஐச் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். இப்பணம் வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் 6004ஆம் இலக்க வைப்புக் கணக்கின் வரவில் சேரக் கூடியதாக பிரதேச செயலகத்தினால் கணக்கு வைக்கப்படல் வேண்டும். அத்தகைய பற்றுச் சீட்டின்றி அனுப்பப்படும் எந்த ஒரு விண்ணப்பமும் நிராகரிக்கப்படும். அத்துடன் எக்காரணம் கொண்டும் செலுத்திய இப் பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக வேறு மாகாணங்களில் தற்காலிகமாக இடம் பெயர்ந்து உள்ளவர்கள் மட்டும் பரீட்சைக் கட்டணமான ரூபா 200/= ஐச் செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை என்ற பெயருக்கு காசுக் கட்டளையாகப் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

08. விண்ணப்பிக்கும் முறை:

இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கு அமைவாக 'ஏ' 4 அளவிலான (21செ.மீX29செ.மீ) தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2001.06.17 ஆம் திகதிக்கு முன்னதாக செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, இல. 35, மக்கெய்சர் வீதி, உவர்மலை, திருகோணமலை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவையின் தொழில் நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) வகுப்பு 11 பிரிவு "ஆ"- 2001/வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவையின் தொழில் நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பயிற்சித்தரம்-2001/வடக்கு - கிழக்கு மகாண பொதுச் சேவையின் தொழில் நுட்ப உத்தியோகத்தர் (படவரைஞர்) பயிற்சித்தரம் - 2001' என்று, தான் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயரை மட்டும் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பதாரி ஒருவருக்கு அவரது அனுமதி அட்டை எழுத்துப் பரீட்சைக்குக் குறைந்த பட்சம் ஏழு நாள்களுக்கு முன்பாவது கிடைக்கப்பெறாவிடின் அது பற்றி பரீட்சார்த்தி உடனடியாக மேலே தரப்பட்ட முகவரியுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

09. பரீட்சை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பிரதான பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு:-

| நகரம் | எண் | நகரம் | எண் |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | - 1 | திருகோணமலை | - 6 |
| மன்னார் | - 2 | மட்டக்களப்பு | - 7 |
| வவுனியா | - 3 | அம்பாறை | - 8 |
| கிளிநொச்சி | - 4 | கல்முனை | - 9 |
| முல்லைத்தீவு | - 5 | | |

ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள நகரத்தின் பரீட்சை நிலையத்துக்கு மாற்றப்படலாம்.

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத அல்லது விளக்கமற்ற விடயங்கள் தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவினாலேயே இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

**திருமதி க.சிவசிதம்பரம்.**
செயலாளர்,
மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை.

மாதிரி விண்ணப்பப் படிவம் 9ஆம் பக்கத்தில் →


மாபெரும் அதிஷ்டச் சீட்டிழுப்பு - புத்தம்புதிய மொன்டிறோ ஜீப்
மாதம் - ஒரு புத்தம்புதிய மோட்டார் கார் (பெறுமதி - ரூ 15 லட்சம்)
வலயச் சீட்டிழுப்பு - ஒரு உழவு இயந்திரம்
வலயச் சீட்டிழுப்பு - ஒரு அதிவேக மோட்டார் படகு
வலயச் சீட்டிழுப்பு - 5 கையியக்க உழவு இயந்திரங்கள்
மாதம் - 3 கணனிகள்
மாதம் - 5 மோட்டார் சைக்கிள்கள்
மாதம் - 5 ஸ்கூட்டர்கள்
மாதம் - 5 குளிர்சாதனப் பெட்டிகள்
தினசரி - 12 தங்க நாணயங்கள்
வலயச் சீட்டிழுப்பு - 10 தங்கநாணயங்கள்
ஜயஶ்ரீ
Jaya Sri
2
உங்கள் கணக்கே
உங்கள் அதிர்ஷ்டம்....
மக்கள் வங்கியின் ஜயஶ்ரீ 2 இன் தினசரி, மாத, வலய மற்றும் மாபெரும் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு நம்பவே முடியாத இந்த அதிர்ஷ்டச் சீட்டிழுப்பிற் தகுதி பெறுவதற்கு, உங்கள் சேமிப்புக் கணக்கில் ஆகக் குறைந்த மாதாந்த நிலுவையாக ரூ. 10,000 /= ஐ அல்லது உங்களுடைய நடைமுறைக் கணக்கில் ரூ. 5,000/= ஐ வைத்திருங்கள். ☆ அதுமட்டுமல்ல! நீங்கள் வைப்புச் செய்யும் ஒவ்வொரு மேலதிக ரூ. 5,000/= மும், உங்கள் வெற்றித் தருணத்தை மேம்படச் செய்யும்.
மக்கள் வங்கியின் ஜயஶ்ரீ 2 இன் மூலம் வெற்றி பெறுங்கள்.
☆ வனிதா வைசனா மற்றும் NRFC/RFC ஆகிய சேமிப்புக் கணக்குகள் இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது.
மக்கள் வங்கி
40 ஆண்டுகள்
மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி
(சி.16764)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## அருட்சகோதரி மேரி தேவநேசம்

(அதிபர், யா/நல்லூர் சென். பெனடிக்ற் றோ. க. த. க. வித்தியாலயம்)

எமது பாடசாலை வளர்ச்சியில் ஆர்வத்துடன் உழைத்துவரும் அதிபர் இன்று (19-05-2001) தனது பிறந்தநாளைக் கொண்டாடும் அதேவேளை, இலங்கை அதிபர் சேவையில் தரம் 2:1 இற்குப் பதவி உயர்வு பெற்றதையிட்டும் அவரைப் பாராட்டுவதுடன் மேன்மேலும் அவர் பணி சிறக்க மனமார வாழ்த்துகின்றோம்.

யா/நல்லூர் சென்.பெனடிக்ற் றோ.க.த.க. வித்தியாலயம்

ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பா.அ.சங்கம்,
ப.மா.சங்கம்.

(87919)



# கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர்

**திரு.வீ.இராசையா**

அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி மீனாட்சி வீரகத்தி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*யா/மூளாய் அ.மி.த.க. பாடசாலை*

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(87926)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 | 29 |
| - | - |
| 03 | 05 |
| - | - |
| 1935 | 2000 |

## அமரர் நாகேசு சோமசுந்தரம்

*திதி:* 19.05.2001

**ஓராண்டு சென்றாலும் மாண்டிடாது - எம் நினைவலைகள்**

ஐயா! நாம் உங்களைக் காண்பது எப்போது
ஐயா! நாம் வேண்டி நிற்பது - மீண்டும்
நீங்கள் எம் கண்முன்னே, தோன்றும் வரம் வேண்டும்
நீங்கள் வரும் நாள் வரையும் நீண்ட
தவம் நாமிருப்போம் - அதுவரைக்கும்
ஐயா! நீங்கள் காட்டிய பாதையில்
தடைகள் தாண்டி நாம் தொடர்ந்திடுவோம்.

இன்று (19.05.2001) சனிக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினரை அன்புடன் அழைக்கின்றோம்.

*91/6, காரைக்காட்டுலேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.*

உங்கள் பிரிவால் துயருறும்:-
மனைவி, மக்கள்

(87896)


## அச்சுவேலி ஆஸ்பத்திரியில் சிரமதானம்

யாழ்ப்பாணம்,மே19

வலி.கிழக்குப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை மற்றும் கோப்பாய்ப் பிரிவு அபிவிருத்தித் தொண்டர் பிரிவு பயிற்சி நிலையம் ஆகியன சிரமதான அடிப்படையில் துப்புரவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த 14 ஆம திகதி நடைபெற்ற இந்த சிரமதான நிகழ்வை கோப்பாய பிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கம் தலைமையேற்று நடத்தியிருந்தார்.

இந்த நிகழ்வில், கோப்பாய்த் தொகுதி அபிவிருத்தித் தொண்டர்கள், சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள், கிராம சேவையாளர்கள் ஆகியோர் பங்கு பற்றியிருந்தார்கள்.

சிரமதான நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய கோப்பாய் பிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கம்தமது உரையில் -

அபிவிருத் தித் தொண்டர்களின் ஆரம்ப வேலைத திட்டங்களால் எமது பிரதேசத்தின் சுகாதாரம் பேணப்பட்டு வருவதுடன் சுற்றுச் சூழலும் அழகுற மேம்படுத் தப்பட்டு வருகிறது. தொடர்ந்தும் மாதம் ஒரு தடவை பொது இடங்களில் ஏற்படும் அசுத்தங்களையும் அசௌகரியங் களையும் சிரமதானம் மூலம் அகற்றி எமது பிரதேசத்தின் சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்த நடவடிக்கை எடுப்போம் - எனத் தெரிவித்தார். (க)

## மிதிவெடிகள் மீட்பு

கொழும்பு,மே19

கொக்குவில் பகுதியில் கைவிடப பட்ட நிலையில் இருந்த வீடொன்றில் இருந்து கடந்த புதன்கிழமை மூன்று மிதிவெடிகளை இராணுவத்தினர் கண்டெடுத்துள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் வெளியிட்ட கள நிலைவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு அருகே வவுணதீவில் அன்றைய தினம் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் சிக்கி பத்து வயதுச் சிறுவன் உட்பட இரு பொதுமக்கள் காயமடைந்ததாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. (ஒ)

## டிப்ளோமா பரீட்சை

யாழ்ப்பாணம்,மே19

யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்ப நிறுவன தேசிய கணக்கியல் டிப்ளோமா இறுதி வருட மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சைகள் எதிர் வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்படும் இந்தப் பரீட்சை தொடர்பான அறிவித்தலை ஆணையாளர் நேற்று முன்தினம் உயர் தொழில்நுட்ப நிறுவனத்துக்கு அறிவித்துள்ளதாக நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை தேசிய ஆங்கில டிப்ளோமா முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான மீள் பரீட்சையும் எதிர் வரும் 26ஆம் திகதி நடை பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-4)



உ

# திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விஷு வருடம் வைகாசி மாதம் 5 ஆம் நாள் இன்று (19-05-2001) சனிக்கிழமை காலை 7.45 மணி முதல் 8.48 மணி வரை வரும் மிதுன லக்கின சுபமுகூர்த்தவேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**சுந்தரலிங்கம்**
(குஞ்சன்)
*அவர்களுக்கும்*



எமது புத்திரி
திருநிறை செல்வி
**நாகலட்சுமி**
(சுகந்தி)
*அவர்களுக்கும்*

இறைவன் திருவருள் துணை கொண்டு சட்டநாதர் கோயில் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

திரு. T. கந்தையா,
வட்டு. வடக்கு,
சித்தன்கேணி

*நிரந்தர முகவரி:*
கைதடி கிழக்கு,
கைதடி.

திரு. திருமதி சுப்பிரமணியம்,
'புலவரகம்'
நவாலி, வடக்கு - மானிப்பாய்.

*நிரந்தர முகவரி:*
நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

(இது விட்டார் அழைப்பு)

(சி16713)



உ

சுழிபுரம் குடியிருப்பு பைரவர் கோயிலென வழங்கும் ஓடையம்பதி ஸ்ரீ பாலாம்பிகாதேவி சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரர் தேவஸ்தான

## கும்பாபிஷேக தின மணவாளக்கோல விழாவும்

## நூதன மணிக்கூட்டுக் கோபுர கும்பாபிஷேகமும்

**காலம்:-** வைகாசி மாதம் 6 ஆம் திகதி
20-05-2001 ஞாயிற்றுக்கிழமை
**நேரம்:-** காலை 6.00 மணி முதல் 7.30 மணிவரை
**கிரியைகள்:-** வைகாசி மாதம் 5 ஆம் திகதி
இன்று (19.05.2001) சனிக்கிழமை மாலை ஆரம்பம்

★ விழாக் குருமார்கள் ★

வாகீச வாரிதி, முத்தமிழ் குருமணி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள் சிவன் கோயில், சுன்னாகம்

சிவாகம கிரியாதத்துவ நிதி சிவஸ்ரீ ச.மு.ரவிக்குருக்கள் பண்ணாகம்

**மணிக்கோபுர நிர்மாண அமைப்பு:-** வே.யோகேஸ்வரன் குழுவினர் அராலி

அனைவரையும் ஆசார சீலராக வருகை தந்து பேரானந்தப் பெரு வாழ்வுக்குப் போற்றி நிற்போமாக.
**அனைவரும் வருக! இறையருள் பெறுக!!**

இறைவன் சேவையில்
**ந.பத்மநாபசர்மா**
-ஆதீன தர்மகர்த்தா

(87880)



# 31 ஆம் நாள் நினைவின் சங்கமம்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 11 | 19 |
| - | - |
| 08 | 04 |
| - | - |
| 1935 | 2001 |

## அமரர் சீவரத்தினம் இராசேந்திரம் (சித்தப்பா)

19.05.2001

*இதயமே அமைதி கொள்*

குடும்ப வானில் உதயமாகி
அன்பால், பண்பால், அறிவால்
ஒளி பாய்ச்சி மகிழ்விக்கும் வேளையில்
காலத்திரை கடுகதியாய் வீழ்ந்ததென்ன...?
பூவுலக பாரம் சுமந்தது போதுமென
கர்த்தர் களி கூர அழைத்தாரோ?

இன்று (19.05.2001) சனிக்கிழமை நடைபெறும் எங்கள் குலவிளக்கின் ஞாபகார்த்த நிகழ்வில் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*48, புகையிரதநிலைய வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.*

மனைவி, மகன், சகோதரர்கள்,

(87860)



# நெஞ்சை உருக்கிய முதலாம் ஆண்டு நினைவு தினம்

## திருமதி இளையதம்பி விசாலாட்சி

தோற்றம் 08-05-1917 மறைவு 29-05-2000

திதி: ஏகாதசி 19-05-2001

பண்புடனே பாரினிலே தோன்றி இனிதே இல்லறம்
நடத்தி ஏழு பேரை இப்புவிமீது ஈந்த எம்மினிய தாயே!
ஊர் உலகு போற்ற உத்தமராய் அவ்வேழு
பேரையும் உயர் நிலையில் வைத்த எம்மிதய தெய்வம் - நீங்கள்!
எப் பெரிய இடர், இடப்பெயர்வு வரினும் எங்கள்
குடும்ப தெய்வத்தை என்றும் நாம் மறவோம்

ஏற்கனவே இறையடி சேர்ந்த ஒரு செல்வம். வன்னியிலே இரண்டு செல்வம், வடமராட்சியில் இரண்டு செல்வம், வலிகாமத்தில் ஒரு செல்வம், வளம் கொழிக்கும் தேசமது சுவிஸிலே ஒரு செல்வம். இத்தனை தொப்புள் கொடிகளையும் மறந்து உம் கடமை செய்யாக்காமல் சென்றதென்ன மாயமோ?

" அம்மாவென்றழைக்காத உயிரில்லையே அம்மாவை
வணங்காது உயர்வில்லையே "
" கருவோடு எமைத் தாங்கி நீங்கள் பட்ட
பெரும்பாடு அறிவோமம்மா "

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

*தற்காலிக முகவரி: மாலுசந்தி, நெல்லியடி.*

*நிரந்தர முகவரி: பேரம்பலம் வீதி, பெரியமாவடி, சாவகச்சேரி.*

இ.சிவானந்தம் (மகன்)
இ.நடராசா குடும்பம்.
(சுவிஸ்)
குடும்பத்தினர். (87863)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ் மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களில் இம்மாதம் 13ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

### யாழ்ப்பாணம்

(109787ஏ) (109787பி) (109787சி)
(109787டி) (109787ஈ) (178862ஏ)
(178862பி) (181208பி) (183158ஏ)
(185928ஏ) (186168ஏ) (186199ஏ)
(188811ஏ) (188811பி) (188811சி)
(188885ஏ) (188995ஏ) (189131ஏ)
(189148ஏ) (189148பி) (189148சி)
(189269ஏ) (189269பி) (189283ஏ)
(189623ஏ) (189623பி) (189623சி)
(189623டி) (189623ஈ) (189623எவ்)
(189623ஜி) (189628ஏ) (189650ஏ)
(189650பி) (189662ஏ) (189664ஏ)
(189668ஏ) (189669ஏ) (190097ஏ)
(190097பி) (190097சி) (190765ஏ)
(190773ஏ) (190802ஏ) (190802பி)
(190877ஏ) (190897ஏ) (190897பி)
(190940ஏ) (190955ஏ) (190955பி)
(190969ஏ) (190969பி) (190991ஏ)
(191026ஏ) (191026சி) (191026டி)
(191032ஏ) (191046ஏ) (191080ஏ)
(191080பி) (191090ஏ) (191090பி)
(191092ஏ) (191098ஏ) (191101ஏ)
(191105ஏ) (191108ஏ) (191110ஏ)
(191115ஏ) (191125ஏ) (191125பி)
(191129ஏ) (191129பி) (191129சி)
(191129டி) (191129ஈ) (191129எவ்)
(191131ஏ) (191142ஏ) (191142பி)
(191157ஏ) (191159ஏ) (191161ஏ)
(191161பி) (191196ஏ) (191208ஏ)
(191217ஏ) (191220ஏ) (191235ஏ)
(191235பி) (191236ஏ) (191238ஏ)
(193027ஏ) (193055ஏ) (193056ஏ)
(193130ஏ) (193140ஏ) (193141ஏ)
(193150ஏ) (193152ஏ) (193157ஏ)
(193158ஏ) (193158பி) (193177ஏ)
(193178ஏ) (193179ஏ) (193180ஏ)
(193181ஏ) (193194ஏ) (193218ஏ)
(193219ஏ) (193233ஏ) (193245ஏ)
(193254ஏ) (193256ஏ) (193276ஏ)
(193288ஏ) (193292ஏ) (193293ஏ)
(193303ஏ) (19312ஏ)

### கோப்பாய்

(191021ஏ) (191034ஏ) (193232ஏ)

### நல்லூர்

(175662ஏ) (175662பி) (175671ஏ)
(179792ஏ) (179792பி) (183013ஏ)
(184517ஏ) (186306ஏ) (187272ஏ)
(189072ஏ) (189171ஏ) (189228ஏ)
(189228பி) (189228சி) (189252ஏ)
(189252பி) (189252சி) (189252டி)
(189627ஏ) (189627பி) (190819ஏ)
(190855ஏ) (190855பி) (190855சி)
(190958ஏ) (190995ஏ) (190995பி)
(190998ஏ) (190998பி) (190998சி)
(191016ஏ) (191016பி) (191028ஏ)
(191028பி) (191040ஏ) (191070ஏ)
(191075ஏ) (191075பி) (191075சி)
(191075டி) (191081ஏ) (191086ஏ)
(191097சி) (191114ஏ) (191136ஏ)
(191136பி) (191136சி) (191138ஏ)
(191144ஏ) (191144பி) (191150ஏ)
(191150பி) (191150சி) (191162ஏ)
(191162பி) (191165ஏ) (191165பி)
(191180ஏ) (191180பி) (191187ஏ)
(191188ஏ) (191188பி) (191197ஏ)
(191197பி) (191206ஏ) (192850ஏ)
(192850பி) (193019ஏ) (193028ஏ)
(193028பி) (193028சி) (193028டி)
(193037ஏ) (193039ஏ) (193091ஏ)
(193095ஏ) (193095பி) (193095சி)
(193095டி) (193097ஏ) (193097பி)
(193097டி) (193108ஏ) (193146ஏ)
(193146பி) (193149ஏ) (193172ஏ)
(193172பி) (193192ஏ) (193315ஏ)

இம்மாதம் 14 ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

### யாழ்ப்பாணம்

(178208ஏ) (184556ஏ) (189225ஏ).
(189272ஏ) (189643ஏ) (189643பி)
(189643சி) (189643டி) (189674ஏ)
(189674பி) (18[illegible]4சி) (189674டி)
(190888ஏ) (191130ஏ) (191134ஏ)
(191134பி) (191134சி) (191134டி)
(191152ஏ) (191171ஏ) (191221ஏ)
(191221பி) (191241ஏ) (191241பி)
(191249ஏ) (193101ஏ) (193106ஏ)
(193124ஏ) (193153ஏ) (193196ஏ)
(193267ஏ) (193310ஏ) (193331ஏ)
(193335ஏ) (193343ஏ) (193352ஏ)
(193373ஏ) (193401ஏ) (193402ஏ)
(193420ஏ) (193437ஏ) (193453ஏ)

### நல்லூர்

(1/ஏ) (1/பி) (1/சி)
(159143ஏ) (159143பி) (159143சி)
(159143டி) (175577ஏ) (175577பி)
(175577சி) (181985ஏ) (188860ஏ)
(189064ஏ) (190834ஏ) (190974பி)
(191012ஏ) (191012பி) (191076ஏ)
(191076பி) (191076சி) (191103ஏ)
(191103பி) (191166ஏ) (191166பி)
(191184ஏ) (191184பி) (191185ஏ)
(191185பி) (191185சி) (191231ஏ)
(191231பி) (193037ஏ) (193037பி)
(193134ஏ) (193135ஏ) (193175ஏ)
(193176ஏ) (193176பி) (193248ஏ)
(193248பி) (193382ஏ) (193438ஏ)
(193438பி) (199267ஏ) (199267பி)
(199267சி)

(தொடரும்)

## ஒரே நாளில் ஐவர் பாம்புக் கடிக்கு இலக்காகினர்!

வவுனியா,மே19

பாம்புக் கடிக்கு இலக்காவோரின் எண்ணிக்கை வன்னிப் பகுதியில் அதிகரித்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் கடந்த புதன்கிழமை மட்டும் ஒரே நாளில் பாம்புக் கடிக்கு இலக்கான 5 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ம-10)

## இராணுவ கோப்ரல் குத்திக் கொலை

கொழும்பு,மே19

எல்கடுவப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இராணுவக் கோப்ரல் ஒருவர் அதே கிராமத்தைச் சேர்ந்த ஒருவரால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மதுபோதையில் இருவருக்கும இடையில் இடம்பெற்ற வாக்குவாதம் முற்றி டபிள்யு.வீ.விஜயநாயக்க என்ற இராணுவக் கோப்ரலை கே.ஜி.புஷ்பகுமார என்பவர் சிறு கைக்கோடாரியால் குத்திக் கொலை செய்ததாக தெரிவிககப்படுகிறது.

கொலையாளி உடலேயே கைது செய்யப்பட்டார்.

(ம)

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## மாதிரி விண்ணப்பப் படிவம்.

**வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவையின் தொழில் நுட்ப உத்தியோகத்தர்(சிவில்)வகுப்பு 11பிரிவு "ஆ" / தொழில் நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பயிற்சித் தரம்/ தொழில் நுட்ப உத்தியோகத்தர்.(111 படவரைஞர்) பயிற்சித்தரம் ஆகிய பதவிகளுக்கு ஆள்சேர்ப்பு - 2001**

சுட்டெண்: ☐
(அலுவலக உபயோகத்திற்கு)

01. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர் வண/திரு/திருமதி/ செல்வி
   தமிழில் :-
   ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :-
02. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள்
   தமிழில் :-
   ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :-
03. தபால் முகவரி
   தமிழில் :-
   ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :-
04. பால்:- ஆண் M/ பெண்: F ☐
05. விண்ணப்பிக்கும் பதவி
   தொழில் நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) வகுப்பு 11 பிரிவு "ஆ." - 1
   தொழில் நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பயிற்சித்தரம் - 2 ☐
   தொழில் நுட்ப உத்தியோகத்தர்(படவரைஞர்) பயிற்சித் தரம் - 3
06. பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்:- ☐
   தமிழ் T/சிங்களம S
07. தெரிவு செய்யும் பரீட்சை நகர எண்:- ☐
   (9 ஆவது பந்தியில் குறிப்பிட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடவும்)
08. இனம்: ☐
   சிங்களம் - 1 இந்தியத் தமிழர் - 4
   இலங்கைத் தமிழர் - 2 ஏனையவர்கள் - 5
   முஸ்லிம் - 3
09. நீங்கள் இலங்கைப் பிரஜையா?
10. அ) பிறந்த திகதி:- வருடம்: மாதம்: திகதி:
   ஆ) 2001. 06. 17ஆம் திகதியன்று வயது:-
   வருடங்கள்: மாதங்கள்: நாள்கள்:
11. (1) நீங்கள் நிரந்தரமாக வதியும் மாவட்டம்:
   (2) பிரதேச செயலர் பிரிவு:
   (3) வதியும் கால எல்லை: தொடக்கம் வரை
   (4) வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக இடம்பெயர்ந்து இருப்பின் -
   தாங்கள் நிரந்தர வதிவு மாவட்டம்:
   (5) தற்காலிகமாக இடம்பெயர்ந்து வதியும் மாவட்டம்: மாகாணம்:
   இடம்பெயர்ந்த ஆண்டு:- மாதம்: திகதி:
12. தகைமைகள்:
12. 1) விண்ணப்பிக்கும் பதவி தொடர்பாகப் பெற்றுள்ள தொழில் நுட்பத் தகைமைகள் தொடர்பிலான விவரங்கள்:
   (I) பெற்றுள்ள டிப்ளோமாவின அல்லது! பின்பற்றியுள்ள பாடநெறியின் பெயர்:
   (II) ஏற்புடைய டிப்ளோமா/சான்றிதழை வழங்கிய நிறுவகத்தின் பெயர்:
   (III) குறிப்பிட்டுள்ள டிப்ளோமா/ சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி:
   (IV) சம்பந்தப்பட்ட துறையில் தற்காலிகமாக/நிரந்தரமாகச் சேவையாற்றி இருப்பின் சேவையாற்றிய காலம்:-
   (V) சேவையாற்றிய நிறுவனம்:-
12. 2. க. பொ. த. (சா/தர) பரீட்சை

சுட்டெண் : ஆண்டு:

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

சுட்டெண்: ஆண்டு:

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

13. பணம் செலுத்திய பற்றுச் சீட்டைக் கழராதவாறு இங்கு ஒட்டவும்.

☐

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் சரியானவை யெனவும் உண்மையானவை என்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ---------------------பிரதேச செயலகத்தின் -------------- ஆம் இலக்க ---------------- ஆம் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் உறுதிகூறுகின்றேன். இப்பரீட்சை விதிகளுக்கு அமைந்தொழுகி நடப்பதற்கும் சம்மதிக்கின்றேன். மேலும் இப்பரீட்சை நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவரெனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சையின் முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்தி நிலையை இரத்துச் செய்வதற்கு எடுக்கும் முடிவுகளை ஏற்றுக் கொள்வதற்கும் எனது இணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திகதி.................. ..............................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

14. விண்ணப்பப் பத்திரத்திலுள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதிவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, படை தாங்கு சேவையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலீஸ் சேவையின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது வருடாந்த திரட்டிய வேதனமாக ரூபா 74,160/= க்கு மேற்பட்ட சம்பளத்தை உடைய அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகிய ஒருவரால் சான்றுபடுத்தப்பட வேண்டும்.

15. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுத்திப்படுத்தல்:
இவ்விண்ணப்பதாரி வண/திரு/திருமதி/செல்வி ---------------------- என்பவர் எனக்கு நன்கு தெரிந்தவர் எனவும் ------------------------- ஆந் திகதி அவர் என்முன்னிலையில் தமது கையொப்பமிட்டார். உனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன் .

திகதி:- ................ ..............................
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்

கையொப்பத்தை உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரின் முழுப் பெயர்:-
பதவி :-
முகவரி
(பதவி முத்திரை) :-

(வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக வேறு மாகாணத்திற்கு இடம்பெயர்ந்துள்ளவர்கட்கு)

மேற்படி விண்ணப்பதாரி வடக்கு - கிழக்கு மாகாணத்தை நிரந்தர பிறப்பிடமாக/வதிவிடமாக கொண்டவர் என்பதையும் அவர் --------------- திகதி முதல் தற்காலிகமாக இடம்பெயர்ந்து --------------- மாவட்டத்தில் வசித்து வருகின்றார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி................. ------------------------------------
பிரதேச செயலர்/கிராம சேவகர் கையொப்பம்.

பதவி:
முகவரி:
பதவி (முத்திரை) :

16 திணைக்களத் தலைவரின் உறுதியுரை:-
இத்திணைக்களத்தின் தற்காலிக/நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றும் வண/திரு/திருமதி/செல்வி --------------------- அவர்களின் விண்ணப்பத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து விடுவிக்க முடியும் என்பதையும் இவர் தனது சேவைக்காலத்தில் எவ்வித ஒழுங்காற்று நடைமுறைக்கும் உட்படவில்லை என்றும் சகல வேதன ஏற்றங்களையும் பெற்றுள்ளார் என்பதனையும் இங்கு அவரால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானவை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி............ ------------------------------------
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பெயரும்

பதவி:
முகவரி:
(பதவி முத்திரை)

(C/16761)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இலக்கியக் கட்டுரைகள்

ஆசிரியர்களே, மாணவர்களே, வினாவிடைகள் மூலம் கற்பதல்ல இலக்கியம. எல்லாவகை இலக்கியங்களும் படைத்த அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நவீன இலககிய விளக்கங்களை இலக்கியக கட்டுரைகள் நூலில் வாசித்துப் பயன் அடையுங்கள். (87894)

## MATHS, ENGLISH

**O/L** இல **Credits, Distinction** பெறுபேறடைவதற்கு ஆண்டு 6-10 வரை ஆரம்பத்திலிருந்து **(Paper Class** உட்பட) கற்பிக்கப்படும். அனுபவமுள்ள ஆசிரியர். 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் பின்புறம், திருநெல்வேலி. (87769)

## நாய்கள் விற்பனைக்கு

ஒரு அல்சேசன் பெண்நாய், ஒரு பொமனேரியன் பெண்நாய், ஒரு **Bull dog** ஆண்நாய் விற்பனைக்குண்டு. 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைசந்தையடி நல்லூர். (87908)

## இறைச்சிக் கோழி

புறொயிலர் **1KG 150/=**, கல்பேட், விறாத்துக்குஞ்சு என்பன விற்பனைகுண்டு. சுத்தம் செய்தல் இலவசம். மற்றும் லவ்பேட்ஸ் மஞ்சள், வெள்ளை, பச்சை, நீலம் என்பனவும் விற்பனைக்குண்டு. 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு). (87923)

இறைச்சிக்கோழி மொத்தமாகவும், சில்லறையாகவும், பாதிக் கோழி உட்பட தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். **S.**கிருஷ்ண குமார் (கிருஷ்ணா பாம் வளவு), மானிப்பாய். (87884)

**Broilers, Cullbirds, Cockerels** இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ செனரர் வளவு), முத்திரைச் சந்தியடி, நல்லூர். (87774)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்ப, 1960 ஆம் ஆண்டு, நட்சத்திரம் பரணி 5 ஆம் பாதம், செவ்வாய்க்குற்றமற்ற, அழகிய ஆசிரியைக்கு பெற்றோர் தகுந்த நற்குணமுள்ள மணமகனை எதிர்பார்க்கின்றனர். ஜாதகக் குறிப்புகளுடன் தொடர்புகொள்ளவும். சீதனம் மற்றும் விடயங்கள் நேரில் பேசிக்கொள்ளலாம். விள.இல.1284. மே/பா. உதயன். (87802)

## வீடு விற்பனைக்கு

காலஞ் சென்ற சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசுமான நட்டராஜன் வீடு விற்பனைக்குண்டு. மல்லாகம், பங்களா லேனில் அதனைப் பார்வையிடலாம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சோ.கெங்காதரன், மணியகாரன் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (87728)

யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகாக சிவலிங்க புளியடிக்கு அணமையில் வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி- **101/1**, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம். (87854)

## தவறிவிட்டது

செட்டி குறிச்சி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை மூர்த்தி என்பவரது தேசிய அ.அட்டை (இல. 582061858**V**), விசேட அ.அ. (இல. 090407637) என்பன 19.04.2001 அன்று யாழ்ப்பாணத்துக்கும் பண்டத்தரிப்புக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ரூபி போட்டோ, ஸ்ரான்லி வீதி, முட்டாஸ் கடைச் சந்தி எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (87952)

சுப்பிரமணியம் சஞ்சயன் என்பவருடைய பாடசாலை அ.அ., வி.அ. அட்டை (இல.0906022456) என்பன யா/இந்துக் கல்லூரிக்கும் சுன்னாகத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டு எடுத்தவர்கள் பருத்திக் கலட்டி, சுன்னாகம் மேற்கு, சுன்னாகம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும் சன்மானம் வழங்கப்படும். (87951)

மாறாம்புலம் பிள்ளையார் கோயில அல்வாய் வடக்கு, அல்வாய், பருத்தித்துறையைச் சேர்ந்த நா.திவாகரசர்மா என்பவரின் தே.அ.அ.(இல. 762414538V), விசேட அடையாள அட்டை (0908019560), வா.ஜெயப்பிரபா என்பவரின் தே.அ.அ.(இல. 798291777**v**), விசேட.அ.அ.(இல. 0908012875) என்பன பேர்சுடன் (16-05-2001ல்) கோண்டாவிலுக்கும் உரும்பிராய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் திவாகரசர்மா, கருணாகரப் பிள்ளையார் கோயில், உரும்பிராய் வடக்கு என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (87902)

## புறோயிலர் விற்பனைக்கு

இறைச்சிக்கோழி புறோயிலர் **(BROILER)** விற்பனைக்குண்டு. **NET WEIGHT** ஒரு கிலோ **Rs. 240/= LIFE WEIGHT** ஒரு கிலோ **Rs. 150/=** சிறிய சேவல் ஒன்று ரூபா **145/=** வாடிக்கையாளர்களுக்கு மேலும் விலைக் கழிவு வழங்கப்படும். தொடர்பு இல.139,கோயில் வீதி, யாழ்ப்பாணம். (87937)

சுத்தம் செய்யப்பட்ட புறோயிலர் கோழி இறைச்சி **1Kg 240/=** விற்பனைக்குண்டு **CHICKEN SAUSAGES, MEAT BALLS, FLORA, MEDOW LEA, ASTRA, ANCHOR BUTTER** என்பன எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். 145, நவீன சந்தை, யாழ்ப்பாணம். **T.P.2866.** (87948)

புறொயிலர் குஞ்சுகள் சனிக்கிழமை (19/5), ஞாயிற்றுக்கிழமை (20/5) விநியோகிக்கப்படும். விவரங்களுக்கு: **S.**கிருஷ்ணகுமார் (கிருஷ்ணா பாம் வளவு), மானிப்பாய்., ராமையா செட்டியார், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (87883)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, ஜேர்மன் பிரஜா உரிமையுடைய 32 வயது பரணி நட்சத்திர மணமகனுக்கு மணமகள் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். விள.இல.1285,மே.பா.உதயன் யாழ்ப்பாணம். (87916)

## விற்பனைக்கு

குளிர்சாதனப் பெட்டிகள் **(NATIONAL, SISIL) RADIO, HAIR DRIER, FANS,** என்பன விற்பனைக்குண்டு. **SAIRAM 101, PALALY ROAD, JAFFNA. (87949)**

கேம்பிறிஜ் வான் விற்பனைக்கு உண்டு. மொடல் **A.55** சனி, ஞாயிறு தினங்களில் பார்வையிடலாம். தொடர்பு:- இல. 105, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம். (87874)

கோல்ட்பிஸ் **(GOLD FISH)** மீன்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- ஐ.அருளானந்தம் (குட்டி), 4C/17 (15/16), சீனியர் லேன், யாழ்ப்பாணம் நண்பகல 12 மணிக்குப் பின் பார்வையிடலாம். (87827)

பாடஸ் கடைக்குகந்த சோக்கேஸ் **5x 31/2 x2** (இருபக்கம் கண்ணாடி உள்ளது) சிறிது காலம் பாவித்த **NATIONAL TABLE FAN, AVON, IRON BOX,** பாவிக்காத **SANYO RICE COOKER** ஆகியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு:-ஆ.இரட்ணராஜா, 83/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழப்பாணம். (87900)

**YAMAHA MATE, 90T,** தபால் மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- **T.**பாலகிருஷ்ணன், **K.K.S** வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். **T.P.** 3604. (87913)

**LUMALA MOUNTAIN PUSH BIKE (18 GEARS) SONY AUDIO Set. (CFS - 1055 S 60w)** என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- **G.**நிரஞ்சன், 27,சோமசுந்தரம் ஒழுங்கை, சுண்டுக்குளி,யாழ்ப்பாணம். (87946)

**SUNSUI (JAPAN) CASSETTE DECK, BOXES, AMPLIFIER, Equalizer, TUNEP, HARMONIUM** (ஆர்மோனியம் , **Double Reads)** என்பன விற்பனைக்கு உண்டு. **S.**அமலன், 18/2, கோயில் ஒழுங்கை, நாவாந்துறை, யாழ்ப்பாணம். (87924)

**20HP** மோட்டர் ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- க.பத்மசீலன், **V.C.**காரியாலய முன் ஒழுங்கை, கோப்பாய் மத்தி, கோப்பாய். (87918)

## குஞ்சு விற்பனைக்கு

பிறிமா, சமீரா, புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- இல.343, **K.K.S.** வீதி, யாழ்ப்பாணம். **T.P.3353**, இல.609, **K.K.S.** வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (87904)

## சொலர் விற்பனைக்கு


**SUNTEC SOLAR (ST 20)** உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- **V.**சுப்பையா. கோப்பாய் மத்தி, கோப்பாய். (87898)

## தேவை

பட்டிட வேலை தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை. வேலை பழகுவோரும் தேவை. தொடர்பு: 18, கொண்டலடி லேன், நல்லூர். (குறிப்பு: இளங்கலைஞர் மன்றம் பின்பக்கம்) (87953)


# விற்பனையாகின்றது!

சர்வதேச வர்த்தகம்
வர்த்தக மாற்று வீதம்
இணைந்த



பொருளியல் நூல்

(கொழும்புப் பதிப்பு)
ஆசிரியர்: வே.கருணாகரன்
(87945)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 20 - 09 - 1945



மறைவு 30 - 05 - 2000

## அமரர் கிருஷ்ணன் சுப்பிரமணியம்

(கட்டைவேலி - நெல்லியடி பல நோ.கூ.ச. கிளை முகாமையாளரும்-மூத்த உறுப்பினரும்)

எமது குடும்பத்தின் குல விளக்கே!
தீபம் அணைந்தாலும் எமது மனங்களில்
என்றென்றும் நினைவி[illegible]
ஒளி வீசிக் கொண[illegible]ப்பீர்கள்!
ஓம் சாந்தி! ச[illegible]ாந்தி!!

சாரையடி,
புலோலி தெற்கு,
புலோலி. (87965)

[illegible]ளை பிரிவ[illegible] வாடும்:
[illegible]வி, பிள்ளைகள்,
[illegible]ார், உறவினர்.

## யாழ்ப்பாண நாட்டார் வழக்கியற் கழகம் யாழ்ப்பாணம்.

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

*காலம்* :- 30.05.2001 புதன்கிழமை பி.ப. 4 மணி.
*இடம்*:- உயர்பட்டப் படிப்புகள் பீடப் பீடாதிபதி அலுவலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

*குறிப்பு* :-

- ☆ இவ் வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்கு யாழ்ப்பாண நாட்டார் வழக்கியற் கழக நிர்வாகக்குழு உறுப்பினர்கள், அங்கத்தவர்கள், மதி உரைஞர்கள் அனைவரும் தவறாது சமுகந்தரவும்.
- ☆ நிர்வாகக் குழு உறுப்பினர்களும், கழக அங்கத்தவர்களும் தமது இவ்வருடத்திற்கான அங்கத்துவப் பணத்தைச் செலுத்தி அங்கத்துவத்தை எதிர்வரும் 27.05.2001 இற்கு முன் புதுப்பித்துக்கொள்ளவும்.
- ☆ புதிய அங்கத்தவர்களும் கழகத்தில் இணைந்து கொள்ளலாம்.

செயலாளர்,
யா.நா.வ. கழகம்.

(87960)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் திரு.அ.ஆனந்தராசா அவர்களின் தந்தை

### கதிர்காமு அப்புத்துரை

அவர்கள் 17-05-2001 வியாழன் காலமாகியதையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(C/16756)


உ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் விஷு வருடம் வைகாசி மாதம் 5ஆம் நாள் இன்று (19.05.2001)சனிக்கிழமை மு.ப. 11.15 மணிமுதல் 12.30 மணி வரையுள்ள தெய்வேந்திர சுபமுகூர்த்தம் நிறைந்த வேளையில்,

எமது சிரேஷ்ட புத்திரன்
சுவேந்திரன்
அவர்களுக்கும்



எமது சிரேஷ்ட புத்திரி
சத்தியபவானி
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு கொக்குவில் நந்தாவில் அம்மன் கோயிலில் திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"நன்றி"
தங்கள் நல்வரவை நாடும்.

திரு.திருமதி இராசரத்தினம்
குடும்பத்தினர்.
வட்டு கிழக்கு,
சித்தன்கேணி.

திரு.திருமதி சத்தியமூர்த்தி
குடும்பத்தினர்.
ஸ்ரேசன் வீதி,
கோண்டாவில்.


(C/16765)

# இந்த வார இராசி பலன்

****** ******

## 20-05-2001 - 26-05-2001

### மகாதேவா ஜோதிடம்




28-05-2001 வரையும் அக்கினி நாள் இருக்கும்.

மாற்றம்

20 — 05 — 2001 இல் ரேவதி நட்சத்திரம் சந்திரன் மீனம் இராசியில் நிற்கும்.

அரசியலில் அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும். சதுரங்க விளையாட்டில் உலக அழுத்தம் — பேச்சுக்கு வந்து மெல்ல,மெல்ல நகரும். ஐ.நா, அமெரிக்கா, நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம் கடும் போக்குக்களைக் கையாளும். இந்தியா மிதமான அசைவுகளைச் செய்யும். பேச்சுக்கள் தொடரும். நியாயமான எதிர்பார்ப்பு நிச்சயிக்கப்படும். இந்தியாவில் ஜெயலலிதாவுக்கு சாதக சூழ்நிலை ஏற்படும். வழக்குகள் வாபஸாகும். காங்கிரஸின் செல்வாக்கு உயரும். மத்திய ஆட்சியில் தளம்பல் நிலை ஏற்படும். வடக்கில் கடும் எதிர்ப்பு வரும். மேற்கு உலகம், கிழக்கு, மத்திய நாடுகளில் தொடர்ந்து பொருளாதார அழுத்தங்களைப் பிரயோகிக்கும். பசுபிக், அத்திலாந்திக் கடல் பிரதேசத்தில் இயற்கையின் கொந்தளிப்பு இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் காற்று அழுத்தம், மழை வீழ்ச்சி என்பன திடீரென தோன்றும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

இந்த காலத்தில் சாட்சிகள் இல்லாத நாம் எந்த விஷயங்களிலும் தலையிடக்கூடாது. ஏனெனில் சந்தர்ப்பவாதிகள், சுயநலக்காரர்கள் பல சாட்சிகளை வைத்துக் கொண்டு கெட்ட காரியங்களைச் செய்து வருகிறார்கள். தொழில் பீடத்தில் சுறுசுறுப்பாக இயங்குவீர்கள். புதிய காணி பூமியில் சிந்தனை செல்லும். இன ஜனக் கொண்டாட்டங்கள் மனநிறைவைத் தரும். தோல் வருத்தம், காய்ச்சல், மூட்டுவலி என்பன வரும். அரசியல்துறை, எழுத்து, செய்தித்துறை, ரீ.வி., வீடியோ துறை, கொம்பியூட்டர்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். மாற்றங்கள் ஏற்படச் செய்யும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வெள்ளி.

### இடபம்

நித்தமும் சண்டை பிடிக்கும் குடும்பத்திற்கு விடிவு வருமா? எப்பவும் யுத்தம் நடக்கும் நாட்டில் வளம் கொழிக்குமா? எனவே நாம் ஆச்சத்திற்கு ஊக்கம் கொடுப்பவர்களாக இருக்க வேண்டும். அரசியல் வாதிகளின் உதவிகள் கிடைக்கும். எதிர்ப்பாளாருடன் வாக்குவாதப் பட நேரிடும். அன்பாகப்பேசிக் காரியங்களைச் சாதிக்க முயலுங்கள். வைத்தியச் செலவுகள் அதிகரிக்க இடமுண்டு. சலம், இரத்த வருத்தங்கள், தொண்டை வருத்தம் என்பன வர இடமுண்டு. இலசத்துறை, ஆசிரியத்துறை, செய்தித்துறை போன்ற துறையினர்களுக்கு நல்லது. பிரயாணத்தைத் தவிர்க்கவும். அல்லது இழப்புக்கள் வரலாம்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வெள்ளி.

### மிதுனம்

மனித வாழ்வில், பொருத்தங்கள் மிக முக்கியமாகும். பொருத்தமற்ற வீட்டிலேயும், பொருத்தமில்லாத மனைவியுடனும் வாழ முடியாது. பொருத்தமில்லாத தொழிலையும் செய்ய முடியாது. ஆனால் நீங்கள் எதிலும்அடிக்கடி பொருத்தங்களைப்பார்த்தாலும், அவசரத்தில் சில தவறுகளை விடச் செய்வீர்கள். சகோதரங்கள் பல உதவிகள் செய்வார்கள். எதையும் கனிவாகப் பேசிச் செயற்படுத்துவீர்கள். முதுகுவலி, உஷ்ணபீடை, பித்தமயக்கம், தலைவலி, களைப்பு என்பன வரும். சட்டத்துறை, வியாபாரத்துறை, குருத்துறை, ஹோட்டல்துறை போன்ற துறைகளைச் சார்ந்தவர்களுக்கு நன்மைகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்டநாள்:- புதன்

### கடகம்

கிரகங்களின் அசைவின் பொருத்தமே முதன்மையானது. அதில் ஓர் அங்கமே அதிர்ஷ்ட எண்களின்பொருத்தமாகும். உங்கள் பிறந்த எண், கூட்டுஎண், பெயர் எண்களுக்கு ஏற்ப தொழிற் பெயர்களை அமைத்து நற்பலனை அடையுங்கள். மந்திர தந்திரங்களில் நாட்டம் செல்லும் காலமாகும். பெற்றோர்வழியினராலும்நண்பர்களாலும் உதவிகள் கிடைக்கும். பொருள்வரவு ஏற்படும். வீடு, வாகனசுகம் கிடைக்கும். எதிர்ப்பாளாருடன் மனஸ்தாபப்பட நேரிடும். வயிற்று வருத்தம், இரத்த அழுத்தம், தோல்வருத்தம், சலவருத்தம், நாரிநோ என்பனவரும். எண்ணெய்த்துறை, அரசியல் துறை, வாகனத்துறை, நீதித்துறை, கோவில் துறை போன்ற துறைகளைச்சார்ந்தவர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்கள்:- புதன், சனி.

### சிங்கம்

தெய்வ காரியங்களைத் தவறாது செய்யவேண்டும். அல்லது மனிதர்களுக்குப் பல கஷ்டங்கள் ஏற்படச் செய்யும். நீங்கள் தெய்வத் தொண்டில் கூடிய சிந்தனையுடன் இருந்து செயற்பட்டபடி இருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் புதிய பொறுப்பு, புதிய திட்டங்கள், மற்றவர்கள் பாதிக்கப்படாத சிந்தனை, விட்டுக் கொடுத்து நடக்கும் தன்மைகளுடன் செயற்பட்டபடி இருப்பீர்கள். அடிக்கடி கோபம், காலில் அடிபடல், நாரிநோ, பிடிப்பு, சலம் அல்லது இரத்தம் சம்பந்தமான நோய்கள் வந்து வருத்த இடமுண்டு. நகை, புடவைத் துறைகள், வியாபாரத்துறை, பிரயாணத்துறை, செய்தித்துறை, குருத்துறை, நிர்வாகத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்: புதன்,சனி.

### கன்னி

எந்த விசயத்திலும் எமக்கென்ன எமக்கென்ன என நாம் விலகி நடந்து கொண்டிருந்தால் பல சந்தர்ப்பங்களையும், பல நல்லவர்களையும் நாம் இழந்து விடுவோம். எனவே தொழில் ஸ்தானத்தில் நிதானமாக இருந்து செயற்பட்டபடி இருங்கள். போட்டிகள் சிலருக்கு வந்து போகும். குறுக்கு வழிகளுக்குப் போகாதீர்கள். அதனால் இழப்புக்கள் ஏற்படச் செய்யும். இடுப்பு நோ, வாதம், மூலநோ, உஷ்ணபீடைகள் என்பன வர இடம் உண்டு. அச்சுத்துறை, கொம்பியூட்டர், செய்தித்துறை, மருந்துத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வெள்ளி, சனி.

### துலாம்

பொறுப்பு அதிகமானவர்கள் ஓடி ஓடித் திரிந்தால்தான் தமது காரியங்களை அனுகூலப்படுத்தலாம். எனவே பொறுப்புக்கூடிய நீங்களும் உங்கள் அலுவல்களை விரைவுபடுத்துங்கள். தொழில் ஸ்தானத்தில் பல நல்ல நிகழ்வுகள் நடக்கும். எதிர்ப்பாளர்கள் உதவிகள் செய்வார்கள். வருங்கால நன்மைக்கு நல்ல சகுனம் ஏற்படும். வயிற்று வருத்தம், நெஞ்சுப் படபடப்பு, ஈரல் வருத்தம், நாரிநோ என்பன கொடுக்கும். சிலருக்கு தடிமன் காய்ச்சல் வந்து வருத்தும். குருத்துறை, வியாபாரத்துறை, நீதித்துறை, பாதுகாப்புத்துறை போன்ற துறைகளைச் சார்ந்தவர்கள் நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வெள்ளி, சனி.

### விருச்சிகம்

நீங்கள் உறுதியுடன் இருந்து செயற்படுவீர்கள். ஆனால் உடல் நிலையில் அடிக்கடி சஞ்சலப்பட்டபடி இருப்பீர்கள். வைத்திய உதவிகளால் நற்பலன்கள் அடைவீர்கள். தொழில் ஸ்தானத்தில் பொருள்வரவு, நல்லவர்களின் உதவிகள் என்பன கிடைக்கும். தூர இடங்களிலிருந்து செய்திகள் வந்து மகிழ்ச்சியைத் தரும். எதிரிகள் உங்களைக் கண்டு பயந்து ஓடுவார்கள். வீடு வாகன சுகம் சிலருக்கு நன்மைதரும். கிருமித்தாக்கம், நரம்பு வருத்தம், வாய்வுத் தொல்லை, சிரசு, கண்வருத்தம் வர இடமுண்டு. அரசியல்துறை, மருந்துத்துறை, நகைத்துறை, செய்தி, எழுத்துத்துறை, குருத்துறை போன்றதுறையினர்களுக்கு நன்மைகள் கிடைக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வெள்ளி, சனி.

### தனுசு

மாறிமாறி இன்ப துன்பங்கள் இவ்வுலகில் சுழல் சக்கரம்தான். அதற்காக எமது கடமைகளை மறந்து இருக்கலாமா? தொழில் ஸ்தானத்தில் நன்மைகள், பொருள் வரவுகள் ஏற்படும். நண்பர்களை நம்ப முடியாது மந்திர தந்திரப் போக்கு எப்பொழுதும் தீமையையே தரும். தெய்வ வழிபாடு, தொண்டுகள், தானதர்மங்கள் என்பன வற்றில் ஈடுபாடு ஏற்படும். கைகால் தாக்கம், குடல் வருத்தம், எலும்புநோ, வயிற்று வருத்தம் என்பன வரும். பாதுகாப்புத்துறை, நிர்வாகத்துறை ஹோட்டல் துறை, சட்டத்துறை, குருத்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு நற்பலன்கள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், ஞாயிறு, வெள்ளி, சனி.

### மகரம்

நாம் இருப்பது சத்தங்கள் கேட்கும் இடங்களில் தான். திடீரெனப் பயங்கர சத்தம் எமக்கு மாற்ற உணர்வுகளைக் கொடுக்க வல்லது. இதே போன்று உங்கள் தொழில் ஸ்தானத்திலும் சத்தங்களால் அடிக்கடி பதற்ற நிலைகள் ஏற்படும். இடமாற்றமொன்று திடீரென வரச் சந்தர்ப்பங்கள் ஏற்படும். வீண்பழி கேட்க நேரிடும். உங்களைப் பற்றி பலதப்பபிப்பிராயங்கள் மேலிடும். கொடுக்கல் வாங்கலில் கவனமாக இருக்கவும். தூர தேசம் போகவோ என்ற எண்ணத்தால் நன்மையில்லை. பகைவர்களுக்கு சாதகமான காலமாகும். கிருமித்தாக்கம், நரம்புப் பிடிப்பு, சனித்தொல்லை, வயிற்றுநோ என்பன வரும். செய்தித்துறை, மருந்துத்துறை, நிர்வாகத்துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்கள் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, வெள்ளி, சனி.

### கும்பம்

தெய்வ அனுக்கிரகமும், இடைவிடாத முயற்சியுமே ஒருவரின் செயற்பாட்டின் வெற்றிப் பாதையை உறுதிப்படுத்தும் — சக்கரங்களாகும். எனவே உங்கள் தொழில் ஸ்தானத்தில் விடாது உறுதியுடன் செயற்படுங்கள். வெற்றிகள் பல கிடைக்க இடம் உண்டு. சிலருக்கு திடீரெனப் பிரயாணங்கள் வர இடம் உண்டு. பொருள் செலவுகள் கட்டு மீறி இருக்கும். கால் வருத்தம், நாரிநோ, தொண்டை வருத்தம், மறதி, படபடப்பு என்பன கொடுக்கும். மரவேலைகள், பாதுகாப்புப் பகுதி, எண்ணெய்த் துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்: ஞாயிறு, சனி.

### மீனம்

பொருளால், திருமணத்தால், பூமியால் ஏற்படும் தாக்கங்கள் ஒருவரின் வாழ்க்கையை எந்தளவு தூரம் மாற்றுகின்றது. எனவே மனிதரின் நம்பிக்கைகளை அளக்கும் கருவிகளான மேற்சொன்னவைகளின் செயற்பாடுகளில் ஒவ்வொருவரும் மிக அவதானமாக இருக்க வேண்டும் என்ற உணர்வு உங்களுக்கு ஏற்படும். தொழிலில் நன்மைகள், பொருள் வளங்கள் அதிகரிக்கும். அயலவர்கள் கோள் சொல்லுவார்கள். கொடுக்கல் வாங்கலில் நிதானமாக இருக்கவும். கால்வருத்தம், படபடப்பு, உணர்ச்சியால் துன்பம், மூட்டுவலி என்பனவரும். சனித் தொல்லை கொடுக்கும். செய்தித்துறை, போக்குவரத்துத் துறை, அச்சுத்துறை, கடல் துறை போன்றவற்றில் தொடர்பானவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்

★ அதிர்ஷ்ட நாள்கள்: ஞாயிறு, சனி.


## கண்ணீர் அஞ்சலி

### திருமதி சகுந்தலாராணி மகாதேவன்

(இலங்கை மின்சார சபை, யாழ். பிரதேச அலுவலகம்)

2001- 5- 17 ஆம் திகதி அமரத்துவம் அடைந்த எமது சங்க உறுப்பினர் அவர்களுக்கு எமது நெஞ்சம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவரது ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை மின்சார சபை,
வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும்,
விளையாட்டுச் சங்கம்.

யாழ்ப்பாணம். (87957)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி சகுந்தலாராணி மகாதேவன்

(பிரதேச அலுவலகம், இலங்கை மின்சாரசபை, சுன்னாகம்)

17—05—2001 அன்று அமரத்துவம் எய்திய எமது சக உத்தியோகத்தரின் மறைவினால் பெருந்துயரம் அடைந்திருக்கும் நாம கலங்கிய விழிகளுடன் எம் கண்ணீர்த்துளிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் பிரிவினால் ஆழ்ந்த துயரில் மூழ்கியிருக்கும் கணவர், மகன் மற்றும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்திபடையப்பிரார்த்திக்கின்றோம்.

மின் பொறியியலாளர்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை, சுன்னாகம்.

(87958)

## நன்றிப் பலி

### அமரர் J.D. மத்தாயஸ்

எனது பப்பாவின் மரணச்செய்தி கேட்டு நீங்கள் அனுப்பிய, பிரசுரித்த அனுதாபச் செய்திகளுக்கும், உங்கள் செபத்திற்கும், இன்னும் சிறப்பாக உங்கள் அன்புக்கும், எனது அம்மா, சகோதரங்கள் பெயராலும் உங்களுக்கு நன்றி கூறுகின்றேன்.

நாளை மறுதினம் (21-05-2001) திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு நல்லூர், புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் பப்பாவின் வாழ்விற்காக நன்றிப் பலி ஒப்புக்கொடுக்கவுள்ளேன். இப் பலியில் இணைந்திட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், உறவினர், பங்குமக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றேன்.

- அருள் திரு. அன்ரன் மத்தாயஸ்

யாழ்ப்பாணம். (87947)

# ஈரானியப் போக்குவரத்துமந்திரியுடன் 29பேர் விமான விபத்தில் உயிரிழப்பு

## விமான நிலையத் திறப்பு விழாவுக்கு சென்றவேளை அனர்த்தம்

தெஹ்ரான், மே 19
ஈரானியப் போக்குவரத்து அமைச்சர் ரஹ்மான் தர்பான் உட்பட 29 பேர் நேற்று முன்தினம் நிகழ்ந்த விமான விபத்தொன்றில் கொல்லப்பட்டனர்.

வடக்கு ஈரானில் கோர்தான் பிராந்தியத்தில் புதிதாக அமைக்கப்பட்ட தாரிக் விமான நிலையத்தை போக்குவரத்து அமைச்சர் திறந்து வைக்கச் சென்ற போதே இந்த விபத்து இடம்பெற்றது.

தெஹ்ரானிலிருந்து சென்ற ரஷ்ய தயாரிப்பான எம்—40 ரக விமானத்தில், அமைச்சர் தர்பான், இரு பிரதியமைச்சர்கள் 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 29 பேர் இருந்தனர்.

தாரிக் விமான நிலையத்தில் அந்த விமானம் இறங்குவதற்கு 10 நிமிடங்கள் இருக்கும் போது, காலநிலை சீரில்லாததால் மீண்டும் தெஹ்ரானுக்கு விமானத்தைத் திருப்பப் போவதாக விமானி கட்டுப்பாட்டறைக்குத் தெரிவித்தார். அதன் பின்னர் சில வினாடிகளில் விமானத்துடனான தொடர்பு அறுந்து விட்டது.

இதனையடுத்து நடத்தப்பட்ட தேடுதல் பணியில் விமானம் மலைப்பகுதியில் மோதி நொறுங்கியது கண்டு பிடிக்கப்பட்டது. (ஓ)

### விமான விபத்தில் 37 பேர் பலி

அங்காரா, மே 18
துருக்கிய இராணுவ சரக்கு விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகி வெடித்துச் சிதறியதில் 37 பேர் பலியாகினர். மலாக்கியா என்ற பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம)

### பரிதி இளம் வழுதி கைது

சென்னை, மே 19
தமிழக சட்டப்பேரவையின் முன்னாள் துணைத் தலைவரும், எழும்பூர் சட்டப்பேரவைத் தொகுதியின் தி.மு.க. உறுப்பினருமான பரிதி இளம் வழுதி நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டார்.

# இஸ்ரேல் இராணுவ நிலைகள் பலஸ்தீன கட்டுப்பாட்டுப் பகுதியில்

## அமைக்கப் போவதாக அறிவிப்பு

காஸா, மே 19
பலஸ்தீனர்களின் கட்டுப்பாட்டில் உள்ள மேற்குக் கரை மற்றும் காஸா பகுதிகளில் தற்காப்பு நிலைகளை அமைக்கப் போவதாக இஸ்ரேலிய இராணுவம் நேற்று முன்தினம் அறிவித்தது.

இஸ்ரேல் இராணுவம் பலஸ்தீனர்களின் கட்டுப்பாட்டுப் பகுதியில் தமது நிலைகளை அமைக்கப்போவதாகக் கூறியிருப்பது இதுவே முதல் முறையாகும்.

இஸ்ரேலின் இந்த அறிவிப்புக் குறித்துக் கருத்துத் தெரிவித்த பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத், பலஸ்தீனர்கள் மண்டியிட்டு அடிபணிய வேண்டும் என்பதற்காக, இஸ்ரேல்தனது, இராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருவதாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

அமைதி முயற்சிகளுக்கு எதிரான வெளிப்படையான அத்துமீறல் இது என்றும் அவர் கூறினார். (ஓ)

### டெண்டுல்கர் ரூ. 80 கோடிக்கு விளம்பர ஒப்பந்தம்

புதுடில்லி, மே 19
இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் 80 கோடி இந்திய ரூபா மதிப்புள்ள விளம்பர ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளார்.

பெங்களூரைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் 'வேர்ல்ட் டெல்' என்ற விளையாட்டு முகாமைத்துவ நிறுவனம் எதிர்வரும் 5 வருடங்களுக்கு தனது விளம்பரம் உட்பட வர்த்தக தேவைகளுக்கு சச்சின் டெண்டுல்கரைப் பயன்படுத்த இந்த ஒப்பந்தம் வழிசெய்கிறது. (ஓ)

### தோல்வியைச் சகிக்க முடியாது

## தி. மு. க. தீவிர தொண்டர்கள் இருவர் தீக்குளித்து மரணம்

சென்னை, மே 19
தமிழக சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க படுதோல்வியடைந்ததால் அக்கட்சியின் தீவிர தொண்டர்கள் இருவர் தேர்தல் முடிவுகள் வெளியான கடந்த திங்கட்கிழமை தீக்குளித்து இறந்தனர்

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரை சேர்ந்த முத்து மற்றும் கோவை மாவட்டம் பொள்ளாச்சியைச் சேர்ந்த நாகராஜன் என்பவருமே தீக்குளித்தவர்கள் ஆவார்கள்.

இந்த இருவரின் தற்கொலைகளும் தம்மைக் கவலையடைய வைத்துள்ளதாகக் கூறியுள்ள கருணாநிதி, தேர்தல் தோல்விக்காக தம்மைத் தாமே மாய்த்துக் கொள்ள வேண்டாம் என்று தி மு க தொண்டர்களிடம் வேண்டிக் கொண்டுள்ளார் (ஓ)

### உலக அரங்கில்

கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற சட்டசபைத் தேர்தலின்போது எழும்பூர் தொகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக பரிதி இளம் வழுதி மற்றும் 9 பேர் மீது கொலை முயற்சி உட்பட பல்வேறு குற்றங்களைச் சுமத்தியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தற்போது நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஓ)

# கேள்வி அறிவித்தல்

## பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், (மாகாணம்) யாழ்ப்பாணம்.

சி

1. பண்ணை முகாமையாளர் விடுதி திருத்துதல், மாவட்ட / விவசாயப் பயிற்சி நிலையம், திருநெல்வேலி வேலைக்கான கேள்வி, யாழ்ப்பாணம் கட்டடங்கள் திணைக்களப் பிரதம பொறியியலாளர் அலுவலகக் கேள்விச் சபையினரால், 2001 ஆம் ஆண்டு ஜூன்மாதம் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணி வரை யாழ்ப்பாணம பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் பெறப்பட்ட கேள்விகள் எமது அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.
2. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் இக்ராட் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்குத் தரம் எம-9 இலும் அதற்கு மேற் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மட்டும் கேள்விப் பத்திரம் பெறுவதற்குத் தகுதியுடையோராவார்.
3. ஒப்பந்தப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம், கடற்கரை வீதியில் அமைந்துள்ள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்று, கேள்விப்பத்திரங்களை 2001 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிவரை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீள் ளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|
| பண்ணை முகாமையாளர் விடுதி திருத்துதல், மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், திருநெல்வேலி | 10,000/- | 500/- |

5. இவை தொடர்பான மேலதிக விபரங்களை நிறைவேற்றுப் பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெறுக்கொள்ளலாம். மேலும் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம்

பிரதம பொறியியலாளர்,
யாழ்ப்பாணம்.

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம்,
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.
18-05-2001

(சி/16772)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சகுந்தலராணி மகாதேவன்

(இலங்கை மின்சாரசபை, தட்டெழுத்தாளர் - சுன்னாகம்)

இன்று (19-05-2001) சனிக்கிழமை நடைபெற இருந்த அன்னாரின் நல்லடக்கம் எதிர்வரும் (21-05-2001) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெறும் என்பதைச் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

தகவல்;
மகாதேவன்
(கணவன்)

பொன்னம்பலம் ஒழுங்கை,
உடுவில் வீதி,
மானிப்பாய்.

(87983)

## கைலாயபிள்ளை புவனேஸ்வரன்

(செல்வம்)

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கைலாயபிள்ளை புவனேஸ்வரன் 16 - 05 - 2001 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கைலாயபிள்ளை — பவளம்மாவின் அன்பு மகனும், லீலாவதியின் அன்புக் கணவரும், நவகிதா (இராஜரட்டை பல்கலைக்கழகம்), மயூரன் (கனடா), ரகுபன் (லண்டன்), செந்தூரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன்), விஜிந்தன் (கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வரமதேவன் (வெள்ளாங்குளம்), குமரகுருநாதன், தங்கேஸ்வரி (கனடா), நிர்மலாதேவி, காலஞ்சென்ற விஜயகுலராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் நாளை (20 - 05 - 2001) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கை குமரகுருநாதன்
(சகோதரன்)

மானிப்பாய் வீதி,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

(87984)

## சங்கரப்பிள்ளை வைத்தியநாதர்

(ஓய்வுபெற்ற கணித ஆசிரியர், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி — இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி)

இளவாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் நிரந்தர வதிவிடமாகவும், இல. 12, 55 ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தையையும் No 10, Kendor Avenue Epsom, Surrey, KT 19 8 R. h ), U K. யைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை வைத்தியநாதர் 17 - 5 - 2001 வியாழக்கிழமை லண்டனில் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லமுத்துப்பிள்ளையின் அன்புக் கணவரும், Dr சற்குணநாயகம் (மனநோய் நிபுணர்) அவர்களின் பாசமிகு தந்தையும் இராஜலட்சுமியின் அன்பு மாமனாரும், குகன் (பல்கலைக்கழகம் — லண்டன்) அவர்களின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் (26 - 5 - 2001) சனிக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்;
க. முருகதாசன்

இளவாலை வடக்கு,
இளவாலை.

(87981)

## பருத்தித்துறை
## ஹாட்லியின் சிற்பி
## க.பூரணம்பிள்ளை அவர்களின்
# 30ஆம் நாள் நினைவு நிகழ்வு

காலம் :- 21-05-2001 திங்கட்கிழமை
நேரம் :- காலை 9.30 மணி
இடம் :- கல்லூரி மண்டபம்

நினைவுரைகளும் மாணவர் நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. அன்னாரது மாணவர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அவர் தம் ஆன்மா என்றென்றும் ஹாட்லி வளாகத்திலேயே சுற்றிக் கொண்டிருக்கும்.

நினைவு நிகழ்வுக்கு திரண்டு வரவும். பழைய மாணவர், முன்னாள் ஆசிரியர்கள் தொடர்புடைய மற்றும் அனைவரையும் அன்புடன் அழைக்கும்

(C/16773) *ஹாட்லிச் சமூகம்.*

## உடற் பயிற்சிப் போட்டி

தென்மராட்சி,மே19

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களின் உடற் பயிற்சிப் போட்டிகள் இன்று காலை 9.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன.

(ஐ-7-117)

## தேவை

சுன்னாகத்தில் உள்ள ஸ்ருடியோ ஒன்றிற்கு உட்புற, வெளிப்புற படப்பிடிப்பாளர்கள், பயிற்சியாளர்கள் இருபாலாரும் தேவை.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

**ரதி அச்சகம்,**
282, கஸ்தூரியார் வீதி,
(87897) யாழ்ப்பாணம்.

## ராஜா
யாழ்ப்பாணம்

சரத்குமார், தேவயாணி மற்றும் பலர் நடிப்பில்

**பாட்டாளி**

காட்சிகள்: 10.30, 2.30, 5.00 (புதிய நேரம்)

## லஷ்சுமி
இணுவில்

கார்த்திக், லைலா, மனோரமா, தாமு நடிப்பில்

**ரோஜாவனம்**

(ரீல்ஸ்)
தினசரி 3 காட்சிகள்
10.30, 2.00, 5.00 (புதியநேரம்)


## நாகம்ஸ்
சுன்னாகம்

இன்று மட்டும்
சினிமாஸ் லிமிட்டட் வெளியீடு
அர்ஜுன், மீனா, ஜோதிகா நடித்த

**ரிதம்**

(ரீல்ஸ் வெளியீடு)
காட்சிகள்: 11.00, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு நாள்களில்
விசேட காட்சி 6.00 (புதிய நேரம்)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திரு.செல்லத்துரை சிவஞானம்
(SOL.SPL.Trd., S.L.P.S 2-1)

(அதிபர், யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்)

அவர்கள் இலங்கை அதிபர் சேவை (S.L.P.S.) தரம் 2-1இற்குப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு நல்வாழ்த்துக் கூறுவதுடன் அவரது சேவை மேன்மேலும் சிறப்புறவும் இன்னமும் பல பதவி உயர்வுகள் பெறவும் இறைவனை வணங்கிப் பாராட்டி வாழ்த்து கின்றோம்.

பொ.குகன் *(மில்)*
சீ.கருணைராசா
*(யாழ்.போதனா வைத்திய சாலை)*
பொ. சிவராசா *(டிராக்டர்)*

*கல்வயல்,*
*சாவகச்சேரி.* (87982)

# கண்ணீர் அஞ்சலி

முன்னாள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்
மக்கள் ஜனநாயகப் பேரவைத் தலைவருமான
**என்.ஆர்.இராமேஸ்வரன்** அவர்களின்
அன்புத் தாயார்



## திருமதி இராசேந்திரம் சிகாமணி
## (பாக்கியம்)

அவர்களின் மறைவிற்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்கள், உறவினர்கள் அனைவர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*பிரிவால் துயருறும் உரிமையாளர்களும்*
*ஊழியர்களும்*

*நியூ விதுஷாயினி நகைமாடம்*
*சுருவில் வீதி,*
*ஊர்காவற்றுறை.*

*நியூ விதுஷா நகைமாடம்*
*191, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C/16770)

# ஓராண்டு நினைவஞ்சலி

உதிப்பு
01
-
06
-
1946



உதிர்வு
31
-
05
-
2000

## திருமதி நடராசா இராசம்மா

**திதி: 20.05.2001**

*கண் விழித்து எம்மையெல்லாம் காத்துவிட்டு*
*கண்ணிமைக்கும் வேளை தனில் எமை மறந்து*
*விண்ணகம் சென்றதேனோ விடைபகருமம்மா?*
*மண்ணுலகில் எம் மூச்சு உள்ளவரை மறவோமே*
*உம் நினைவை!*

சொந்த முகவரி:
*கத்தாப்படி வீதி,*
*துணாவில் மத்தி,*
*சாவகச்சேரி.*

தற்காலிக முகவரி:
*திருமகள் சோதி வீதி,*
*கரணவாய் மத்தி,*
*கரவெட்டி.* (C/16774)

பிரிவினால் துயருறும்:
**கணவன், பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பரமேஸ்வரன் சர்மினி

சரசாலையைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரன் சர்மினி நேற்று முன்தினம் (17.05.2001) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

நேற்று நடைபெறவிருந்த அன்னாரின் இறுதிக்கிரியைகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் கச்சேரி கிழக்கு ஒழுங்கையிலுள்ள இல்லத்தில் இன்று (19.05.2001) சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஐ.குணரத்தினம் *(தந்தை),*
(பனை அபிவிருத்திச் சபை)

*கச்சேரி கிழக்கு ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.* (87988)

## நாகலிங்கம் துரைச்சாமி

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் துரைச்சாமி நேற்று (18.05.2001) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற நாகலிங்கம் - அன்னம்மாவின் மூத்த மகனும் கந்தையா - அருளம்மாவின் மருமகனும் வரதலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கந்தசாமி, குமாரசாமி, கனகம்மா, சின்னத்தம்பி(கிட்டு), தர்மலிங்கம், இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் லோகேஸ்வரன், பரமேஸ்வரன்(ஜேர்மனி), புஸ்பவதி, புஸ்பராணி (டென்மார்க்), குகராணி, ராஜேஸ்வரன்(ஜேர்மனி), ரஜனி, செல்வராணி (பிரான்ஸ்), யோகநாதன்(பிரான்ஸ்), யசோதா(பிரான்ஸ்), கவிதா, நந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்தானலட்சுமி, காலஞ்சென்ற ஜெயராஜா, மகேஸ்வரி, கிருபாகரன், தயாபரன், புண்ணியமூர்த்தி, குமுதினி, தர்மராசா, மகேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் யோகயாழினி, யோகப்பிரகாஷ், யோகநந்தி, யோகதர்சன், யோகதர்சினி, சபேசன், சவிதன், லுகிதா, றொமேஸ், கிஜிதா, சஜிதா, வாசுகி, வைதீகா, வைஷாலினி, ரஜீகன், தஜனிகா, சுபானிகா, சிவானுஜா, சர்மிலன், தாரகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (19.05.2001) சனிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வரதலட்சுமி *(மனைவி),*

*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.* (87987)


# D.சேனாதிராஜா அன் சன்ஸ்



**(LONDON CERTIFIED OPTOMETRIST**
**M.H.D.I. கும்பகோணம், L.C.O. இலங்கை)**

*செயற்கைப் பற்கள் கட்டுமிடம், மிதப்புப் பற்களுக்கு கிளிப் செய்யுமிடம்*

**1960 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது ஸ்தாபனம் 41 வருட காலம் எமது வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்து, மேலும் பல விசேட சலுகைகளுடன் தனது சேவையைத் தொடர்கின்றது.**

## 25% விசேட கழிவுடனான புதிய விலைகள்

| | |
|---|---|
| METAL FRAME WITH BIFOCAL LENSE | 1000 /= |
| METAL FRAME WITH READING GLASS | 800 /= |
| METAL FRAME LATEST MODEL SUN GLASS | 500 /= |
| PLASTIC FRAME WITH READING GLASS | 500 /= |

ரூபாய் 1500க்கு மேல் எம்மிடம் மூக்குக் கண்ணாடியைக் கொள்வனவு செய்பவர்களுக்கு அழகிய **SUN GLASS** ஒன்று இலவசமாகத் தரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறித்தருகின்றோம்.

*இல.184, யாழ். மத்திய பஸ் நிலையம்*
*(பழக்கடைகள் அருகில்),*
*பண்டத்தரிப்பு, சண்டிலிப்பாய்.*
*(பஸ் தரிப்பிடம் முன்பாக)*
*யாழ்ப்பாணம்.* (87970)

41 வருட கால சேவை

உரிமையாளர்:
**சே.ஆனந்தராஜா**

## பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடன்

# மக்கள் குறை நிவிர்த்தி சேவை நகரில் இன்று ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம்,மே19

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சின் ஏற்பாட்டில் மக்கள் குறை நிவிர்த்தி சேவை இன்று காலை 9.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

கடவுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, கல்வி, சுகாதாரம், பொதுநிர்வாகம், ஓய்வூதியம், வேலைவாய்ப்பு வங்கி, அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு, வங்கி, போக்குவரத்து தொடர்பான பொதுமக்களின் பிரச்சினைகள் இந்தச் சேவையில் கவனத்தில் எடுக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய, மாகாண அரசுகளின் கீழ் இயங்கும் அமைச்சுகள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச நிறுவனங்களின் அதிகாரிகள் இந்தக் குறை நிவிர்த்தி சேவையில் கலந்துகொண்டு மக்களின் குறைகளைக் கேட்டறிந்து உரிய நடவடிக்கைகளை உடனேயே எடுப்பர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இன்றும் நாளையும் இந்தக் குறை நிவிர்த்திச் சேவை நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வினை ஒட்டி யாழ். மத்திய கல்லூரி சுற்றாடலில் நேற்று முதல் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நூற்றுக்கணக்கான பொலீஸாரும் இராணுவத்தினரும் மேலதிக பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். (ஐ-5-6)

## கூட்டணி எம்.பிக்களுக்கு மாறாக

# இணைப்புக் குழுக் கூட்டத்தில் மேயர் ரவிராஜ் பங்குபற்றினார்

யாழ்ப்பாணம்,மே19

யாழ்.மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தை யாழ்.செயலகத்தில் நடத்தாமல் வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சின் யாழ்.அலுவலகத்தில் நடத்தினால் அதில் பங்குபற்றுவதில்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் எம்.பிக்கள் மூவரும் அறிவித்திருக்க -

கூட்டணியின் அந்த முடிவை மீறி யாழ்.மேயர் என்.ரவிராஜும், பிரதிமேயர் செல்லன் கந்தையனும், வலி.வடக்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி பா.ஸ்ரீபாஸ்கரனும் நேற்றைய கூட்டத்தில் பங்குபற்றினர்.

கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ.ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராசா, எஸ்.சிவமகாராசா ஆகியோர் நேற்றைய கூட்டத்தில் பங்குபற்றவில்லை.

ரவிராஜ், பா.ஸ்ரீபாஸ்கரன் ஆகியோர் நேற்றைய கூட்டத்தில் தமது பகுதியின் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து உரையாற்றினார்கள்.(உ-3)

## ஆனந்தசங்கரியின்

# அசிங்கப் பேச்சுக்களுக்கு பதில் தரமாட்டார் தவராஜா!

யாழ்ப்பாணம்,மே19

ஆனந்தசங்கரியின் அசிங்கமான அரசியல் பேச்சின் வழியில் ஈ.பி.டி.பியினராகிய நாம் இழுபடத் தயாராக இல்லை. எனவே அவரது அசிங்கக் குற்றச்சாட்டுகளுக்கு நாங்கள் பதில் தரப்போவதில்லை. அரசியல் ரீதியான விடயங்கள் இருந்தால் அதற்கு அரசியல் வழியில் பதில் தருவோம்.

- இப்படிக் கூறினார் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.தவராஜா.

தங்கள் அமைப்புக் குறித்து ஆனந்தசங்கரி தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக உதயனுக்கு நேற்றிரவு தகவல் வெளியிட்டபோதே தவராஜா இப்படிச் சொன்னார்.

"இப்படி அசிங்கம் கதைத்துக் கதைத்தே அரசியல் நடத்திய இந்தத் தலைவர்கள்தாம், அதன் மூலம் எமது மக்களை இந்த இழிநிலைக்குக் கொண்டுவந்து விட்டிருக்கிறார்கள். இது மக்களுக்கு நன்கு தெரியும்.

இந்த அசிங்க அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நேரம் வந்து விட்டது. தூற்றுபவர்கள் தூற்றட்டும். அதில் அரசியல் குற்றச்சாட்டுகள் இருந்தால் நாம் பதிலளிப்போம். அசிங்கப் பேச்சுகளுக்குப் பதில் தரவேண்டியதில்லை.

- இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(உ)


கைதடி பொதுநூலகத்துக்கு அருகில்
மீண்டும்...
மின்னொளி கல்விக் கழகம்
ஆண்டு 4 தொடக்கம் 11 வரை
ஆரம்பம்:
இன்று (19.05.2001) காலை 9 மணி
O/L DAY CLASS (பழைய பாடத்திட்டம்)
ஆரம்பம்:
21.05.2001 காலை 9 மணி (87950)



BIT
நீங்கள்...!
(A/L) பரீட்சையில் 3 பாடம் மட்டுமா சித்தி....?
கவலையை விடுங்கள்!
கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிப் பட்டதாரியாகும் அரிய சந்தர்ப்பம்!
இந்தக் கற்கை நெறிக்கு கொழும்பு பல்கலைக் கழகத்தால் 2ஆம் தடவையாக அனுமதிப்பரீட்சைக்குரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இவ்விண்ணப்ப படிவங்களை எமது தலைமைக்காரியாலயத்திலோ அல்லது கிளைநிறுவனத்திலோ பெற்று 30.05.2001 இற்கு முன்னர் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கவும்.
Director(A/D)
Head Office: IBMS
NO.701, K.K.S ROAD JAFFNA
Branch: IBMS, M.M.V Road Nelliyady. IBMS, Near M.P.C.S, Chankanai.
T.P : 021 3165


### 6 படையினர் காயம

தென்மராட்சியில் கடந்த ஒரு வார காலத்தில் ஆள்களுக்கு எதிரான கண்ணிகளில் சிக்கி ஆறு படையினர் காயம் அடைந்ததாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் சிவிலியன் ஒருவரும் ஆள்களுக்கு எதிரான கண்ணியில் சிக்கிக் காயம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## மூன்று முக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மான - பயங்கரவாத - அமைப்பு என்ற பெயருடன் எமது இயக்கம் ஒருபொழுதும் 'பேச்சுக்களில் பங்குபற்றப்போவதில்லை" என்று அவர் வற்புறுத்திக் கூறினார்.

நோர்வேப் பிரதிநிதிகளிடம் தமிழ்ச்செல்வன் மேலும் கூறியதாவது:-

"அரசியல் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு தடையாக இருக்கின்ற- எமது அமைப்பின் மீதான - தடையை நீக்கி, நாம் அதிகாரபூர்வமாக மக்களினுடைய பிரதிநிதிகளாகப் பேச்சுக்களில் பங்குபற்றக்கூடிய வாய்ப்பை ஸ்ரீலங்கா அரசாங்கம் ஏற்படுத்தித் தரவேண்டும். ஆனால் சட்டவிரோதமான - பயங்கரவாத - அமைப்பு என்ற இழிபெயருடன் நாம் பேச்சுக்களில் பங்குபற்ற முடியாது. அப்படித்தான் பங்குபற்றினாலும் அது சட்டவிரோதமான பேச்சாகவே அமையும். நாம் தமிழீழ மக்களின் ஏகபோக பிரதிநிதிகள் என்ற தகைமையுடன் சமத்துவமான அந்தஸ்துடன்தான் பேச முடியும்.

#### சுமுகமான சூழலிலேயே பேச்சு

"பேச்சுக்கள் தொடங்குவதை நாம் இழுத்தடிக்கவில்லை. ஆனால் முதலில் பேச்சுக்களுக்கான சூழல் உருவாக்கப்படவேண்டும். எமது மக்கள் மீதான அழுத்தங்கள் நீங்க வேண்டும். நாம் சுமுகமான சூழலில் வாழ்வதாக மக்கள் எண்ணக்கூடிய நிலை உருவாகவேண்டும். எமது இறுதி இலக்கு அரசியல் பேச்சுக்கள் மூலமாகத் தீர்வு காண்பதுதான். நாம் தடை செய்யப்பட்ட அமைப்பாக இருந்துகொண்டு பேசமுடியாது. நாம் எமது மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அமைப்பு. எம்மைத் தடை செய்து அரசு குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியுள்ளது. ஸ்ரீலங்கா அரசாங்கம் எம்மீதான தடையை நீக்கி பேச்சுக்கான வழியை ஏற்படுத்தவேண்டும். தேர்தலில் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட தமிழ்க் கட்சிகள், வெகுஜன அமைப்புகள், பல்கலைக்கழக சமூகம் போன்றவையும் இதைத்தான் வலியுறுத்தி வருகின்றன. எமது மத்திய குழுவும் இது தொடர்பாக விரிவாக ஆராய்ந்து ஓர் உறுதியான முடிவை எடுத்துள்ளது. இதுவே பேச்சுக்களில் பயன் மிகுந்தவையாகவும், அர்த்தமுள்ளவைகளாகவும் அமையும். எனவே பேச்சுக்களில் பங்குபற்றும் தரப்புக்கு வழங்கவேண்டிய உரிமையையும் அந்தஸ்தினையும் வழங்க அரசாங்கம் மறுத்துள்ளது.

#### சம அந்தஸ்துடனேயே பேசுவோம்

"பாலஸ்தீன விடுதலை இயக்கம், ஐரிஷ் குடியரசு இராணுவம் மற்றும் இந்திய வடகிழக்கு பிரிவினைவாத அமைப்புக்கள் போன்றவற்றுடன் எம்மை ஒப்பிட முடியாது. நாம் ஒரு மரபுவழி இராணுவமாக வளர்ந்து நிற்கின்றோம். எமக்கென ஒரு பெரும் கட்டுப்பாட்டுப்பகுதி உள்ளது. நாம் மக்களுக்குரிய காவல்துறை, வங்கி, கல்வி என நிர்வாக அமைப்புக் கலையும் ெ...ப்படுத்துகின்றோம். எம்மோடு முன்னைய காலங்களில் பேச்சுக்கள் நடைபெற்ற பொழுதும், எம்மீதான தடைநீக்கப்பட்ட பின்னரே எமக்கும் அரசிற்கும் இடையில் பேச்சுக்கள் நடைபெற்றன. சம அந்தஸ்துடன் இருந்துதான் நாம் பேசினோம்.

#### தெற்கில் தாக்குதலை நிறுத்தினோம்

"நோர்வேயின் புரிந்துணர்வுப் பிரகடனம் என்ற யோசனைத் திட்டத்தின் பிரதான நோக்கம் பேச்சுக்கான ஒரு நல்லெண்ண சூழ்நிலையை - இயல்பு நிலையை - ஏற்படுத்துவதுதான். இதனைப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு செல்லும் ஓர் அடித்தளமாகப் பாவிக்கக்கூடாது. இது பேச்சுக்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தும் அடிப்படை ஏற்பாடே. இருதரப்பினரும் இதில் பரஸ்பரம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க இணங்கியிருக்கின்றார்கள். இந்த யோசனைத்திட்டத்தில் எமக்கு ஒரு கடப்பாடு இருக்கின்றது. அதாவது தென்னிலங்கையில் வன்முறை நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும். நாம் இன்னும் இந்த ஆவணத்தில் கைச்சாத்திடாதபோதும் கடந்த ஆறுமாத காலமாக எமக்குத் தரப்பட்ட கடப்பாட்டை ஒழுங்கான முறையில் பேணிவருகின்றோம். ஆனால் அரசு பொருளாதாரத்தடைகளை முழுமையாக நீக்காமல் எமது மக்களின் பொருளாதார வாழ்வுக்கு ஆதாரமான சில அத்தியாவசியப் பொருள்களுக்கு இறுக்கமான கட்டுப்பாடுகளை விதித்திருக்கின்றது. கட்டுப்பாட்டுடன் அனுமதியாகும் பொருள்களும் ஒழுங்காக வந்து சேருமோ என்பது எமக்குத் தெரியாது. எனினும் எமது மக்களின் பொருளாதாரப் பளு ஓரளவிற்காவது நீங்கவேண்டும் என்பதற்காகவே நாம் நோர்வேயின் இந்தத் திட்டத்தை கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளத் தீர்மானித்தோம்"

- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்ததாக அறியவந்தது.

(உ-3-4)

## மன்னாரிலும் கிளைமோர் தாக்கு

மன்னார்,மே19

மன்னார் மாவட்டத்தில் தலைமன்னார் - எருக்கலம்பிட்டி வீதியில் நேற்றுப்பிற்பகல் 3.30 மணியளவில் படையினர் சென்ற ஜீப் வண்டி மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கிளைமோர் தாக்குதலில் அதிரடிப் படையைச் சேர்ந்த இருவர் காயம் அடைந்தனர்.

இந்தத் தாக்குதலை அடுத்து படையினர் அப்பகுதியில் மேற்கொண்ட தேடுதலின் போது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ-3)

## வவுனியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையம் நேற்றுப் பகல் விடுத்த அறிக்கையில், இரு பொலீஸார் உட்பட எட்டுப் படையினர் கொல்லப்பட்டதாகவும், 16பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ஐ-3-7-164)

### திருமலையில் மோதல்

கொழும்பு,மே19

திருகோணமலை மாவட்டத்தில் அலஸ்தோட்டத்துக்கு அருகே புதுக்குடாரப்பு என்னும் இடத்தில் கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுக் காலை மோதல் இடம்பெற்றுள்ளது.

இந்த மோதலில் விடுதலைப் புலிகள் உறுப்பினர் ஒருவர் உயிரிழந்தார் என்றும் -

அவரது சடலமும் ரி-56 ரகத் துப்பாக்கியும் மீட்கப்பட்டுள்ளதாகவும் விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (ஐ-3)

### சீனப் பிரதமர் ஜனாதிபதியுடன் பேச்சு

கொழும்பு,மே19

கொழும்பு வந்துள்ள சீனப் பிரதமர் சூ.றொங்ஜி நேற்றுக்காலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்து சுமார் ஒருமணி நேரம் உத்தியோகபூர்வ பேச்சு நடத்தினார்.

இருநாடுகளுக்கும் இடையிலான உறவைப் பலப்படுத்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இரு தலைவர்களும் பேசியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பேச்சுக்களின் போது அமைச்சர்களான லக்ஷ்மன் கதிர்காமர், அனுரபிரிய தர்ஷன யாப்பா, ரவூப் ஹக்கீம், டி.எம்.ஜயரட்ன, ஜீ.எல். பீரிஸ் ஆகியோரும் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவும் உடன் இருந்தனர்.

## சொல்ஹெய்ம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று வன்னியில் இருந்து கொழும்பு திரும்பியவுடன் சொல்ஹெய்ம் இந்தியத் தூதர் கோபால கிருஷ்ண காந்தியையே முதலில் சந்தித்தார் என்றும் -

அதன் பின்னரே அவர் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தியதாகவும் -

தெரியவந்தது.

இன்று நோர்வே திரும்புவதற்கு முன்னர் சொல்ஹெய்ம் மீண்டும் ஜனாதிபதியைச் சந்திப்பார் என்றும் அறியவந்தது. (ஐ-3-4)


எமது புதிய வீடியோ CD வெளியீடு
✻ அவள் பாவம்
அல்டி எலக்ரோனிக்ஸ்
15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

CHEMISTRY
83, பலாலி வீதி, கந்தர்மடம்
ஆரம்பமாகும் புதிய Group classes
★ BASIC
★ GENERAL
★ ORGANIC
★ PHYSICAL
CENTRE
(87911)
ஆசிரியர்:- அன்பு.

SUBRA(14)
சித்தன்கேணி
A/L 2002
ORGANIC
Sat., sun. 4 - 5
PHYSICAL
Sat., sun. 3 - 4
ஆசிரியர்:- அன்பு
(87912)

புதிய வீடியோ CD வெளியீடு
அவள் பாவம்
புதிய வீடியோப் போஸ்ரர்கள் விற்பனைக்குண்டு.
விஷ்ணு வீடியோ
கே.கே.எஸ்.ரோட், கோண்டாவில்

A/L 2003
அளவையியல்
எடுப்புக்கள்
S.சயந்தன்
புதன், வெள்ளி
4.15 p.m.
சைன் உடுவில்
(87893)

விற்பனையாகின்றது
A/L வணிகக் கல்வி
பயிற்சி நூல் I
✻ பல்தேர்வு வினாக்களும் விடைகளும்
✻ பொருந்தும் வகை வினாக்கள்
✻ குறும் விடையை எதிர்பார்க்கும் வினாக்கள்
✻ சரி பிழை கூறும் வினாக்கள்
✻ இவை தொடர்பான 97,98,99,2000 ஆண்டுகளுக்கான A/L பரீட்சை வினாக்களும் விடைகளும் அடங்கியுள்ளன.
ஆக்கியோன்: B.S.பசில் ஜெனதாஸ் B.B.A.
கிடைக்குமிடங்கள்:
✻ பூபாலசிங்கம் புத்தகசாலை ~ யாழ்ப்பாணம்
✻ ஸ்ரீலங்கா புத்தகசாலை ~ யாழ்ப்பாணம்
✻ துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ் ~ சுன்னாகம் (87972)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் (19.05.2001) இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.